ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-கஎ] பிரமாதி—தை [பரல்-௰

சிருங்கார ரஸம்

[ஆசிரியர் திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்]

சிருங்கார ரஸம் என்பது தமிழில் இன்பச்சுவை என்று கூறப்படும். சுவைகள் பலவற்றுள்ளும் இதுவே சிறந்ததெனக் கொள்ளப்படுகின்றது. திருக்குறள், காமத்துப்பால் அவதாரிகையில், "ஈண்டு இன்பம் என்றது ஒருகாலத்து ஒரு பொருளால் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காமவின்பத்தினை. இச்சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனும், 'சுவை பலவென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச்சுவை யொன்றனையுமே' என இதனையே மிகுத்துக் கூறினன்" எனப் பரிமேலழகர் பகர்ந்தனர். காமவின்பமானது ஒருகாலத் தொருபொருளால் ஐம்புலனும் நுகரும் பான்மையது என்னும் ஒள்ளிய கருத்தினை,

> "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்,
> ஒண்டொடி கண்ணே யுள"

என்னும் வள்ளுவர் வாய்மொழி தெள்ளிதின் விளக்கும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் இச்சுவைக்கு உவகை என்று பெயர் கூறி,

> "செல்வம் புலனே புணர்வு விளையாட் டென்று
> அல்லல் நீத்த உவகை நான்கே"

என்னும் சூத்திரத்தால், உவகைச் சுவைக்குப் பற்றுக்கோடானவை செல்வமும், அறிவும், புணர்ச்சியும், விளையாட்டும் ஆகுமென விளம்பினர். அவர் ஏனைய நகை முதலிய சுவைகளைப்போன்றே இதனையும் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாக ஓதியுள்ளார். அகப்பொருளாகிய இன்பத்திற்கு இச்சூத்திரத்துள்ள புணர்வு என்பதனாற்குறிக்கப்படும் காதலே

ஆதாரமாகும். செல்வம் முதலாயின வெல்லாம் அதற்குத் துணையாகும் இயல்பினவே.

அகப்பொருளாவது, "ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்தபேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வா றிருந்தது எனக்கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருள்" என்பர் **நச்சினார்க்கினியர்.** அங்ஙனம் ஒத்த அன்புடைய இருவரும் கூடியொழுகும் ஒழுக்கத்தைக் களவொழுக்கம் எனவும், கற்பொழுக்கம் எனவும் இரண்டாகப் பகுத்துரைப்பது தமிழ் நூன்முறை. அவற்றுள், களவாவது உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் ஒத்த தலைமகனும் தலைமகளும் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றிப் பால்வகையால் தாமே எதிர்ப்பட்டுக் கூடியொழுகுவது. கற்பாவது அவ்விருவரும் முறைப்படி வரைந்துகொண்டு இல்லிலிருந்து அறம் புரிந்து ஒழுகுவது.

புணர்வு என்பது மெய்யுறு புணர்ச்சியையன்றி உள்ளப் புணர்ச்சியையும் குறிக்கும். உள்ளப்புணர்ச்சியாவது அன்பால் இருவர் உள்ளமும் கலத்தல். எனவே, இவ்வொழுக்கத்திற்கு அடிப்படையானது அன்பு அல்லது காதல் என்பது பெறப்படும். இப்பிறப்பிலே யாதொரு முற்றொடர்பும் இன்றிக் கண்டமாத்திரத்தே அவர்களுக்குள் உண்டாகும் இக்காதலுக்குக் காரணம் முற்பிறப்பின் தொடர்ச்சியே ஆதல் வேண்டுமன்றோ? எனவே, தலைவன் தலைவியர்க்குள் தோன்றி வளரும் இவ்வன்பானது எழுமையும் தொடரும் உழுவலன்பாம் என்பது பெறப்படும். இவ்வுண்மை,

> "ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"

என்று **தொல்காப்பியரால்** கூறப்பட்டுள்ளது. எல்லாப்பிறப்பிலும் உயிரொன்றி ஒருகாலைக் கொருகால் அன்பு முதலியன சிறத்தற்கு ஏதுவாகிய பால்வரை தெய்வத்தின் ஆணையாலே ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்ப்படுவர் என்பது அதன் பொருளாகும். இத்தகைய அன்பின் மென்மையும் மேன்மை, யும், தூய்மையும் சீர்மையும் தமிழ் நூல்களில் பலபடியாகப் பாராட்டப்படுகின்றன.

> "மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
> செவ்வி தலைப்படு வார்"

என்றார் திருவள்ளுவர். தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் புறப்பொருளைக் காட்டிலும் அகப்பொருளே விரித்தும் மிகுத்தும் கூறப்பட்டுளது. அவை யாவும் அன்பின் சிறப்பை விளக்குவனவேயாகும். மெய்ப்பாட்டியலுள்ளும் அகப்பொருள்பற்றிய நிகழ்ச்சிகளே விரித்துரைக்கப்பட்டுள்ளன. மற்றும், ஆலவாய்ப்பெருமான் அருளால் அகப்பொருணூல் ஒன்று வெளியாயதும், அன்பே வடிவாகி, இன்பவெள்ளத்திற்றிளைத்த **மாணிக்கவாசகப்**பெருமான் அகப்பொருட்கோவையொன்று அருளியதும் அகப்பொருளின் விழுப்பத்திற்கு உறுசான்றாகும். அன்பு என்பது மக்கள் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஊடுருவிச்சென்று பயன்விளைப்பதாகலின், அதனை விளக்குவதாகிய அகப் பொருளைச் சான்றோர் பலரும் இங்ஙனம் விரித்துரைத்தாராவர்.

இனி, காதலால் இருவர் நெஞ்சமும் கலத்தலைப் புலப்படுத்தி, இன்பச்சுவையை நன்கு தோற்றுவிக்கும் **குறுந்தொகைச்** செய்யுள் ஒன்றை நோக்குதும்.

> "யாயும் ஞாயும் யாரா கியரோ ?
> எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
> யானும் நீயும் எவ்வழி அறிதும் ?
> செம்புலப் பெயனீர் போல
> அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"

தெய்வத்தால் நிகழ்ந்த கூட்டத்தின் பின்பு தலைவியானவள் தலைவன் தன்னைப் பிரிவானோ என ஐயுற்றதனைக் குறிப்பாலறிந்து, "என் தாயும் நின் தாயும் முன்பு எத்தகைத் தொடர்பினர்? என் தந்தையும் நின் தந்தையும் எம்முறையில் உறவினர்? யானும் நீயும் முன்பு எவ்விடத்தில் அறிந்துள்ளோம்? இம்மூன்றும் இல்லையாகவும் செந்நிலத்தில் பெய்த நீர்போலத் தெய்வத்தின் தூண்டுதலால் நம் இருவர் நெஞ்சமும் கலந்து ஒன்றுபட்டனவாகலின் இனிப் பிரிவு என்பதும் உளதோ?" எனத் தலைவன் கூறினான் என்க.

> "தேவரிற் பெற்றநம் செல்வக் கடிவடி வார்திருவே
> யாவரிற் பெற்றினி யார் சிதைப்பார்"

என்னும் **மணிவாசகர்** திருவாக்கும் இக்கருத்தினதே.

மிதிலையில் திருவீதியிற் சென்று கொண்டிருந்த இராமனும் கன்னிமாடத்தும்பரில் நின்ற சீதையும் ஒருவரை யொருவர் கண்டு காதல் கொண்டதனைத் தெரிவிக்கும் **கம்பநாடர்** கவிதைகள் பெரிதும் இன்பம் பயப்பனவாகும்.

" எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவும் நிலைபெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் "

" பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை யொருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை யண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார் "

திருமண நிகழ்ச்சியின் முன்பு அவ்விருவரும் ஒருவரை யொருவர் கண்டனராக வான்மீகி கூறாதிருப்பவும், தமிழ்மரபு கருதியே கம்பர் இங்ஙனம் சித்திரிப்பாராயினர். இருவருடைய காட்சியின் இயல்பையும் அதனோடு ஒருங்கு நிகழ்ந்த உள்ளக்கலப்பையும் தெரிவிக்கும் அவரது வித்தகக் கவித்திறத்தை எங்ஙனம் விளம்பவல்லேம்?

இனி, அன்பால் உள்ளங்கலந்த தலைவன் தலைவியர்க்குள் நிகழும் கூட்டம், பிரிவு, ஆற்றியிருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐவகை யொழுக்கங்களில் இரங்கலும் ஊடலும் முறையே அழுகையும் வெகுளியுமாகத் தோன்றினும் அவை காதலைச் சிறப்பிப்பனவே யாதலின் அவற்றையும் இன்பச் சுவையென்றே கோடல்வேண்டும். ஆனால், பழைய உரையாசிரியர்கள் வெவ்வேறு மெய்ப்பாடுகளாகவும் அவற்றைக் குறித்திருப்பது சிந்திக்கற்பாலது. ஒரோவழி அவை ஒருங்கியைந்து வருதலும், இன்னது இதுவெனத் துணியலாகாவாறு மயங்கி வருதலும், வியப்பு முதலிய ஏனைச் சுவைகளோடு விரவி வருதலும் உண்டு. கணையாழியைப் பெற்ற கற்பினுக்கணியாய சீதை எய்திய நிலைமையைத் தாசரதிக்கு உரைக்கும் மாருதியின் கூற்றில் அமைந்த

"ஒருகணத் திரண்டு கண்டேன், ஒளிமணி யாழி ஆன்ற
திருமுலைத் தடத்து வைத்தாள் வைத்தலும் செல்வ நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயினால் வெந்து
உருகியது உடனே ஆறி வலித்தது குளிர்ப்புள் ளூற"

என்னும் அருமைச் செய்யுளின் சுவை பல்கால் நுகர்ந்து இன்புறற்பாலது. பிராட்டி தன்மார்பில் அணைத்த ஆழியானது விரகத்தால்உண்டாய வெப்பத்தால் உருகியதும், உவகையால் ஆய தட்பத்தால் ஆறிஇறுகியதும் ஒருங்கு நிகழ்ந்தனவாகக் கூறப்படுதலின் இதன்கண் அழுகை, உவகை என்னும் சுவைகள் இயைந்துள்ளமை பெறப்படும். ஒருகணத்து இரண்டும் நிகழ்ந்தன என்றமையால் வியப்பும் தோன்றாநிற்கும். இவற்றுள் வியப்பும், அழுகையும், உவகையைச் சார்ந்து அதனைச் சிறப்பிப்பனவாகக் கொள்ளுதல் தகுதியாம்.

கண்ணகியின் காற்சிலம்பை முதலாகக்கொண்டு வாணிகஞ் செய்தல் கருதி, மதுரைக் கேகும் கோவலன், செல்லும் நெறியில் மாதவி விடுத்த ஓலையைக் கோசிகன் என்னும் மறையோனாற் பெற்று, அதன் மடிப்புறத்து மண்ணின்மீது மாதவி குறுநெறிக் கூந்தலால் ஒற்றிய இலச்சினையைக் கண்டு, அது தன்னுடன் கூடியுறையும் காலத்தே வாச நெய்பூசிய தன்மையை உணர்த்திற்று ஆகலான் அதனை விரைவில் விடுவியாதிருந்தனன் என்பதில் மெய்ப்பாடு இன்னதெனத் துணிதற்கரிதாகின்றது.

> "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
> நீரினும் ஆரள வின்றே சாரற்
> கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
> பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

என்னும் தலைவி கூற்றில் வியப்பும் இன்பமும் விரவியுள்ளன. இனி, தலைவன் கூற்றிலும் தலைவி கூற்றிலும் வரும் சுவை மிக்க பாட்டுக்களில் ஒவ்வொன்று காட்டுதும். திருக்கோவையாரில் உள்ள

> "சொற்பாலமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
> நற்பால் வினைத்தெய்வம் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
> பொற்பார்அறிவார் புலியூர்ப்புனிதன் பொதியில் வெற்பில்
> கற்பாவிய வரைவாய்க் கடிதோட்ட களவகத்தே"

என்னும் அருமைச் செய்யுளும், 'தலைவனவன் 'நல்வினைத் தெய்வம் இவளைக் களவின்கண் கூட்ட, அமுதமும் அதன் கட் கரந்துநின்ற சுவையும் என்ன என் நெஞ்சம் இவள் கண்ணேயொடுங்க, யான் என்பதோர் தன்மை காணாதொழிய, இருவர் உள்ளங்களும் ஒருவேம் ஆமாறு கரப்ப ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கண் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் யாவரான் அறியப்படுமென்று மகிழ்ந்துரைத்தான்; உரைப்பக் கேட்ட தலைமகளும் எம்பெருமான் என்கண் வைத்த அருளினாலன்றோ இவ்வகை அருளியதென்று இறப்பவும் மகிழ்வாளாம்" எனப் பேராசிரியர் விளக்கிய அதன் கருத்தும் இன்பச்சுவையை இனிது புலப்படுத்தா நிற்கின்றன.

> "நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
> என்றும் என்றோள் பிரிபறியலரே
> தாமரைத் தண்டா துதி மீமிசைச்
> சாந்திற்றொடுத்த தீந்தேன்போலப்
> புரைய மன்ற புரையோர் கேண்மை
> நீரின் றமையா நம்நயந் தருளி
> நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
> சிறுமை யுறுபவோ செய்பறி யலரே"

இந்நற்றிணைச் செய்யுளில், தலைவியானவள் தான் வருந்தும்படி தலைவர் தன்னைப் பிரியார் என்று தோழிக்குக் கூறுபவள், அதற்கு ஏதுவாக, தலைவர் நிலைபெற்ற வாய்மையை உடையர் என்றும், நெடிது தோன்றும் இனிய குணங்களுடையர் என்றும் உரைப்பதும், அவருடைய நட்பானது தாமரையின் தாதினையும் சந்தனத்தின் தாதினையும் ஊதிச் சந்தனமரத்தில் வைக்கப்பெற்ற தேன்போல மேன்மையுடையதென்று விளம்புவதும் இன்பம் பயக்கின்றன. இதிலுள்ள உவமையானது இருவர் உள்ளத்தின் தூய்மையையும் ஒத்த அன்பின் சீர்மையையும் இனிது விளக்குதல் காண்க.

இனி, அன்பு என்பதன் இயல்பும், அதனால் விளையும் நலங்களும் மனோன்மணீய நாடகத்தில் வாணியின் கூற்றில் வைத்துக் கூறப்பட்டிருப்பன அறிந்து மகிழற்பாலன.

“ நேயமும்
ஆக்கப் படும்பொருள் ஆமோ? நோக்கில்
அன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியுங் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சம் சிறிது
தங்கி அங்குஅவர் அங்கங் குளிரத்
தாருவாய்த் தழைத்தும், ஓயாத் தொழிலில்
நேருந் தாகம் நீக்குவான் நிமல
ஊற்றா யிருந்துஅவ ருள்ளம் ஆற்றியும்,
ஆறலை கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாய்அவர் நெறிமுறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்றுகோ லாய்அவ ருக்கம் உயர்த்தியும்,
இவ்விதம் யாரையும் செவ்விதிற் படுத்தி
இகத்துள சுகத்திற்கு அளவுகோ லாகி,
பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்,
இல்லறம் என்பதன் நல்லுயி ரேயாய்,
நின்ற காதலின் நிலைமை, நினையில்,
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றும் தன்மை யன்றி, ஒருவரால்
ஆக்கப்படும் பொருள் ஆமோ?”

இதுகாறும் கூறியவாற்றால் ‘பிறப்பே குடிமை’ என்னும் சூத்திரத்தில் தோல்காப்பியர் கூறிய ஒற்றுமை பலவுமுடைய தலைவனும் தலைவியும் அன்பாற்கலந்து வாழும் ஒழுக்கத்தைத் தெரிவிக்கும் பாவாணரின் செய்யுட்களில் அமைந்த சுவையே இன்பச்சுவை அல்லது சிருங்கார ரஸம் ஆகும் என்பது பெறப்படும்.

எழுத்து—இதன் பெயர்க் காரணம்

[வித்துவான் திரு. அ. கிருட்டினமூர்த்தி அவர்கள்]

எழுத்தென்பது தற்காலத்தில் எழுத் திலக்கணம், இலக்கணம், வரிவடிவு என்ற இம்மூன்று பொருளையும் தருவதாக இராநின்றது. முறையே "எழுத்துஞ் சொல்லும் பொருளும்" என்பதும், "எண்ணென்ப வேனையெழுத்தென்ப" என்பதும், "நீர்மே லெழுத்திற்கு நேர்" என்பதும் முற்போந்த பொருட்கேற்ற உதாரணங்கள் என்க. இவையாவும் எழுத்து என்னும் சொல்லின் தோற்றத்தை உணர்த்துவன வல்ல. அதாவது, எழுத்து என்னும் சொல் எவ்வாறு உண்டாயிற்று? அதன் காரணமென்ன? என்பன இவற்றால் விளங்கவில்லை. ஆனால் "எழுதப்படுதலின் எழுத்தே யவ்வெழுத் தசைந்திசை கோடலின் அசையே" என்றார் ஒரு பழந்தமிழாசிரியர். யாப்பருங்கலத்தினும், காரிகையினும் அவற்றின் உரையாசிரியர்கள் இதனை எடுத்து விளக்கியிருப்பதைக் காணலாம். இக்கோட்பாட்டிற்கு மாறாக "எழுப்பப் படுதலி னெழுத்தே" என்று ஒருபேராசிரியர் கூறினர். பொருந்திய பொருள் இதுவென்று விளங்காமையின் இருபாற்பட்ட இக்கூற்றுக்களை வைத்து, ஒரு திட்டமான முடிபுக்கு வருவது இடையிலகப்பட்ட நம் கடனாக எஞ்சி நின்றது.

இலக்கணத்தில் உயிரெழுத்து, மெய்யெழுத்து, குற்றெழுத்து, வல்லெழுத்து, சார்பெழுத்து முதலாகப் பல்வேறு எழுத்துப் பெயர்களைக் காண்கிறோம்; கற்கிறோம். சித்திர வெழுத்து, வட்டெழுத்து முதலாக வேறு சில பெயர்களையும் கேட்கிறோம்; சிலவிடங்களிற் பார்க்கிறோம். இவற்றுள் முற்போந்தவை ஒலிவடிவுபற்றியும், பின்னருள்ளவை வரிவடிவு பற்றியும் வந்திருக்கின்றன.

இவற்றுள் சித்திரவெழுத்து என்பது மனிதன் முழு நாகரிகம் எய்தாமுன்னம், மொழி சீர்த்திருத்தமடையா முன்னம் தன் கருத்தை வரையும்போழ்து ஓவிய உருவத்தில் அவனால் வரையப்பட்டவை. அவன் ஒவ்வொரு கருத்திற்கும் ஒவ்வோரோவியமாக அல்லது கருத்துக்களின் பகுதிகளுக்குத் தனித்தனி ஓவியமாக வரைந்து காட்டினான். இந்த நிலை பலதிற மாறுபாட்டிற்குப் பிறகு கால வளர்ச்சியால் வந்ததொன்றாம். இஞ்ஞான்றும் பல ஆங்கில அகரவரிசையிலும், அவைபோன்ற சில தமிழ்நூல்களிலும் காணலாம் சில சொற்களுக்குப் பொருள் ஓவியமாக வரையப்பட்டி

ருப்பதை. சிற்சில கருத்துக்கள் விரித்தெழுதியும் விளங்காது போயின், அவை ஓவியமாக வைத்து இன்றும் விளக்கப் படுகின்றன.

இவற்றிற்குச் சித்திரவெழுத்து என்னும் பெயர் இடப்பட்டது உரையாசிரியர் காலத்தில். ஏனெனில் உரையாசிரியர் கூற்றுக்களாலன்றி எழுத்தின் பெயராகச் சித்திரவெழுத்தென்று வேறிடங்களில் காணப்படவில்லை. சித்திரம் என்னும் சொல் அவ்வெழுத்து வழங்கிய காலத்தில் வழங்கிற்றெனக் கூறுதற்கில்லை. எழுத்து என்னும் சொல்லும் இருந்ததா என்பது மிகவும் ஐயப்பட வேண்டுவதே. இவ்வெழுத்தைப்பற்றி அது வழங்கிய காலத்திற்குப் பிறகு பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து பிறந்த உரையாசிரியர்கள் கூறிப்போயினர்; இடைப்பட்ட சான்றோர் இதுபற்றி யாதுங் கூறிற்றிலர். அது வழங்கிய காலத்து மக்கள் அதற்கு என்ன பெயரிட்டழைத்தனர் என்பதும் நமக்குத் தெரியாது. ஆதலின் அப்பெயரைப் பற்றி அடிப்படையில்லாமையின் இக்கட்டுரையில் ஆராய வேண்டுவதின்று.

அடுத்து நிற்பது வட்டெழுத்து. இது பிற்காலத்தில் கல்வெட்டுக்களினும், உலக வழக்கினும் இருந்ததாக அறியப்படுகின்றது. இவ்வெழுத்து வரிவடிவாற்பெற்ற பெயரினை யுடையதாகத் தெரிய வருகிறது. இவ்வெழுத்து தோன்றுவதற்கு முன்பிருந்த எழுத்துக்கள் எப்பெயரின என்பது தெரியவில்லை. ஆயினும், இவ்வெழுத்து வழங்கியதாக அறியப்படும் காலத்திற்கு முன்பேயே எழுதப்படுதலான் எழுத்து என்னும் காரணம் தோன்றுமாறு, "கயலெழுதிய விமய நெற்றி" எனவும் "எழுதுவரிக் கோலம்" எனவும் சிலம்புநூல் முதலியவற்றில் பயிலவந்து வழங்குகின்றது.

இனி, கண்ணெழுத்தாளர் எனும் பெயரொன்று சிலப்பதிகாரத்தில் தெரியக் கிடக்கின்றது. இது திருமுகமெழுதுவோரின் தொழிலைக்குறித்து நின்றது. இவ்வகைப் பெயர்கள் பலவிருக்கலாம். அவற்றின் ஆராய்ச்சியும் ஈண்டு வேண்டுவதின்று. மற்றும் அடிப்படையும், காலமும், ஆட்சியும் அறியப்படாது பெயர்மட்டில் தெரியப்படுகின்ற சில சொற்களை அவை தெளிவாகும் நாள்வரையில் ஒதுக்கிவைத்து, இருப்பவற்றால் கொள்ளப்படும் முடிபினை ஏற்பது சாலவும் சால்புடைத்தாமென்க.

சங்க விலக்கியங்களில் 'எழுத்து' என்பது எழுதப்படுதலான் வந்த பெயர் என்பதற்கும், வரிதல் என்னும் பொரு

ளில் வருதற்கும் ஏற்ற சான்றுகள் பல வழங்குகின்றன. எனினும், தொல்காப்பியத்தில் அங்ஙனம் வழங்குமாறில்லை. அதனைச் சிறிது ஆய்ந்திடுவோம்.

ஆசிரியர் இளம்பூரணர், "தொல்காப்பியனார் காரணம் பற்றியன்றிக் குறியிட்டார்" (தொல். எழுத்து-௩) எனக்கூறினாராயினும் பொதுவாகத் தமிழ்ப்பெயர்கள் யாவும் பழந்தமிழ் நாட்டில் காரணம் பற்றியே வழங்கப்பட்டன வென்பது ஒரு தலை. தமிழின் இயற்கையமைப்பும் அவ்வகையது; ஆனால் இக்காலத்தில் நெடுந்தொகையான சொற்களுக்குக் கருவியறியுமாறில்லை.

ஆசிரியர் தொல்காப்பியனார் எழுத்தென்றால் என்ன? சொல்லென்றா லென்ன? பெயர் வினை யிடை யுரி முதலான பெயர்ச் சொற்களின் சிறப்பான இலக்கணம் யாது? என்பனவற்றைத் தனிப்படக் கிளந்தோதாது அவ்வவ்வியற் சூத்திரங்களும், அவற்றின் கருத்துக்களும் துணையாகக் கருதிக்கொள்ள வைத்துப்போயினார். ஆதலின், எழுத்துக்கள் எனச் சிறப்பித்துக் கூறப்படுவன "அகரமுதல் னகரவிறுவாய்" எனத் தொடங்கினார் தமது நூலை. இலக்கண நூலில் வருகின்றவற்றிற்கெல்லாம் கருவிகூறியே போகவேண்டும் என்னும் வரையிறையில்லை. ஏனெனில், அவர் எழுத்து, சொல், பொருள் என்ற பகுதிகளில் அடங்கும் செய்திகளையே விரித்துக் கூறப்புகுந்தாராகலின்.

இனி, குற்றெழுத்தென்பது குறுகிய வளவாக எழுந்து புறத்தேவந்து இசைப்பது; நெட்டெழுத்தென்பது நெட்டளவாக எழுந்து புறத்தேவந்து இசைப்பது. இங்ஙனம் பொருள் கொள்ளின், எழுத்து என்பது காரணப்பெயர், எழுந்து புறத்தே இசைப்பதனால் என்பர் ஒருசாரார்; எழுதப்படுதலான் எழுத்து எனவே அது காரணப்பெயர் என்பர் இன்னொரு சாரார். இதுகாறும் போந்தவற்றால், இவ்விரு வகை வழக்குகளின் சான்று நிலை இன்னதெனக் கூறப்பட்டது. இருமருங்கினும் எழுத்து என்பது காரணப்பெயர் என ஒரு முடிபாகத் தெளிவு செய்யப்பட்டது.

எழுதப்படுதலான் வந்ததெனற்குத் தொல்காப்பியத்தில் சான்று காணேமென்று முன்னர்க் கூறப்பட்டது. ஆகவே, எஞ்சிய ஒரு கூற்றிற்குள்ள காரணங்களை ஆயத்தொடங்கி, முதற்கண் தொல்காப்பியத்தின் பிறப்பியலை எடுத்துக்கொள்ளுவோம்.

பிறப்பியல், எழுத்துக்கள் எங்ஙனம் பிறக்கின்றன என்பதை விளக்கி நின்றதன்றி, எங்ஙனம் எழுதப்படுகின்றன என்பதை அவ்வியலில் ஒரு வரியானும் கூறிற்றில்லை. "அகத்தெழு வளியிசை" எனக் கூறுமுகத்தான், எழுத்து "அகத்தில் எழுகின்ற காற்றால் பிறக்கும் இசை" என்றார்; இதனை வலியுறுத்தித் தெளிவுபடுத்தினார், "உந்திமுதலா முந்துவளி தோன்றி" ((தொல்-பிறப்-க) என்ற அடியானும் அதன் சூத்திரத்தானும். இவ்விரு கருத்தையும் தொகுத்து, "எழுந்து புறத்திசைக்கும், மெய்தெரி வளியிசை யளபுநுவன் றிசினே" (தொல்-பிறப்-உக) என்னும் இவ்வியலின் இறுதிச் சூத்திரத்துள் கூறித் தாம் எவ்வகை எழுத்திற்கு இலக்கணம் செய்தார் என்பதையும் விளக்கிப்போயினார்.

அன்றியும், எழுத்திற்குக் கூறிய மாத்திரையெல்லாம் அதனை ஒலித்தற்கு வேண்டிய காற்றை எந்த அளவு எழுப்புவது என்பது பற்றி நின்றமையல்லால், எவ்வாறு எழுதுவது என்பதற்காக வன்று. எடுத்துக் காட்டாக, "மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்து வேறிசைப்பினும்—எழுத்தியல் திரியா வென்மனார் புலவர்" என்னும் சூத்திரத்தில் எழுத்தின் இயலாக மாத்திரையைக் குறிப்பிட்டமை காண்க. வடிவு கூறாமையுங் காண்க.

குற்றெழுத்துக்கள் நெட்டெழுத்துக்களின் பின்னின்று அவற்றின் ஓசை குறைந்திருக்குமாயின் அதனை நிறைவு செய்யுமென்றார், அளபெடையில். இன்னும், அக்குற்றெழுத்துக்கள் வரம்பின்றி வாரா; மற்று, பிறப்பு, ஓசை, புணர்ச்சி, வடிவு இவற்றான் ஒப்புமையுடையனவே வரும் என்றார். இவ்வொப்புமைகளின் வடிவு பற்றிய ஒப்புமையைக் காட்டில், ஒலி பற்றியது மிக்கிருப்பது காணத்தக்கது.

நிற்க "நீட்டம் வேண்டி னவ்வளபுடைய கூட்டியெழூஉத லென்மனார் புலவர்" எனும் சூத்திரத்துள், 'நெடிலையும் குறிலையும் பிளவு படாமல் வேண்டிய வளவாக எழுப்புக' என்றார்; ஆனால் எழுதுக என்று கூறினாரில்லை. எனவே, முன்னர்க் கூறிய வடிவும் இவ்வளபெடைச் சூத்திரத்தில் இல்லையாயிற்று; மாறாக மாத்திரையாகிய ஒலி வலியுறுத்தப்பட்டது. இங்ஙனம் ஒலி வலியுறுத்தப்பட்டு, வடிவு கூறப்படாமற் போகவே, ஆகாரம் அளபெடுக்கும் பொழுது இகரக்குறில் பக்கத்தில் எழுதப்படுதல் சாலுமோ என்ற வினா இங்கு எழுதல் கூடும். அதற்கு விடையாக, ஆகாரம் அளபெடுத்தால் அதன் குறிலைக் குறிக்கும் வடிவம் அவ்வக்காலத்தில் எவ்வுருவில் இருக்கிறதோ

அவ்வுருவிலேயே எழுதப்படலாம்; அதனால் வடிவு மாற்ற மன்றி ஓசைபிறழ்ந்து போதல் இல்லை என்போம். ஏன்? ஆ என்ற எழுத்து நீண்டால் ஆஅ என்று இசைப்பதல்லது, ஆ௨ என்று இசையாமையின் என்க. இக்கோட்பாடு முக்காலத்திற்கு மேற்புடையதல்லவோ! எனவே எழுத்திற்கு முதன்மை ஒலி என்பதாயிற்று.

அன்றியும், எழுத்துக்களின் வரிவடிவம் உணர்த்தலாகாமையானும், ஒலியைக் காட்டினும் அவற்றின் வடிவு விரைந்து காலப்போக்கில் மாறுமாதலானும் அங்ஙன மாறாத ஒலியடியாகப் பிறந்த எழுத்துக்கே இலக்கணங் கூறத் தொடங்கினார்; தொடங்கி, அவ்வெழுத்தின் பெயர்க் காரணங்களையும் ஆங்காங்கு விளங்க வைத்தார். இனி, குறியவளவாக எழுந்து புறத்தே யிசைப்பது குற்றெழுத்து என்பதே பொருத்த முடைத்தாம். என்னை? குறுகியவளவாக எழுதப்படுவது எனின், அது பொருந்தாது போதலான். இதுவே நெட்டெழுத்திற்கும் காரண முறையாம்.

நீருக்குப் பெருஞ்சூடு தரின், அது ஆவியாக மாறிப்போம்; அதனையே மிகக் குளிரவைப்பின் தண்ணென்ற பனிக்கட்டியாக இறுகிப்போம். இவ்விரண்டற்கும் இடைப்படநிற்கும் நீரையே உயிர்கள் பயன்படுத்துகின்றன. இதனால் அறியப்படுவது நீருக்கு வன்மை, மென்மை, இடைமை யுண்டென்பது. அஃதேபோல் உந்தியினின்று எழுப்பப்படும் காற்று வலிமையாக எழுப்பப்படின் வல்லெழுத்தாம்; மெலிதாக எழும்பினால் மெல்லெழுத்தாம். இடையெழுத்தின் இலக்கணமும் இது போன்றதேயாம். ஏன் நீரைக்கொண்டு விளக்கவேண்டுமெனின், இரண்டும் பூதக்கிளவியாய் ஒன்றுபடுதலின்.

குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற சார்பெழுத்துக்கள் தம் மோசையிற் குறுகியும், மெலிந்தும் வந்தமையான் இப்பெயர் பெற்றன. “ஆய்தல் நிழத்தல் சாய்தல்” என்னும் தொல்காப்பிய உரியியல் சூத்திரவிதிப்படி ஆய்தம் என்பது மெலிந்த ஓசையது எனப்பொருள்படும்; எனவே, இவையாவும் இசையால் எழுந்த பெயர்களே.

உயிரென்பது காற்று; அதுபோல் தனித்தெழுந்து இயங்கக்கூடிய எழுத்தை உயிரெழுத்தென்றார். அங்ஙனம் மாட்டாது உயிரின் உதவியை நாடிநின்ற மெய்யைமெய்யெழுத்தென்றார். ஆகவே, இவையும் காற்றெழுந்து ஒலிக்குமுறையால் இப்பெயர் பெற்றன என்பதை இப்பெயர்களாலே விளக்கினார்.

மொழியின் காரணம் எழுத்து; எழுத்தின் காரணம் ஒலி; அவ்வொலியின் காரணம் அணு; அவ்வணு செவிப்புலனாவது. ஆகவே, எழுத்து ஒலிகுறித்த காரணத்தாலே பெயர்பெற்றது. இன்னும் எழுப்பப் படுதலான் தூணுக்கு ‘ எழு ’ எனப்பெயர் வந்தது. அதே காரணத்தால் அதாவது மேலே தூக்கி விடப் படுதலான் கணையமரங்கள் ‘ எழூஉ’ எனும்பெயர் பெற்றன. எழால் என்னும் பெயர் யாழுக்குண்டு; அது தன்னகத்தே இசையினையும், இசைப்போனிடத்தே பாட்டினையும், கேட் போனிடத்தே இன்பத்தையும் எழுப்பி விடுதலான். எனவே, எழுதல் என்னும் பொருள் பயக்கும் ‘ எழு ’ என்பதனடி யாகப் பிறந்த வேறு பலசொற்களையும் கண்டோம்.

சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையினும், “ ஈரநிலத்தி னெழுத் தெழுத்தாக ” என்பதற்கு ஆசிரியர் அடியார்க்கு நல்லார், “ (பாடலினிடத்துச்) சொன்னீர்மைகளின் எழுத் துக்கள் சிதையாமலே எழுத்தெழுத்தாக இசைக்கும் (குழ லோன்) ” என்றார். இதிற் கூறப்பட்ட எழுத்து என்பது ஒரு சாராசிரியர் கூறுமாறுபோல் ‘ சரிகமபதநி ’ என்பதாயினும் மற்றுயாதாயினும் அது ஒலியெழுச்சி ஒன்றே குறித்து நின் றமையல்லால் வரிவடிவு குறியாமையுங் கண்டோம். புல்லூ றென்னும் ஒருவகைப் பறவைக்கு ‘ எழால் ’ என்னும் ஒரு பெயருமுண்டு. அப்பெயர் விசைத்தெழுந்து உயர்ந்து பறத்த லான் வந்த பெயரெனக்கொள்ள இடனுண்டு. ஏனெனின், அது விசும்பின்கண் மிகவுயரத்தில் ஆடுகின்ற பருந்திேனாடு சில விடங்களில் கூட்டிக் கூறப்படுதலான். “ புன்புறவெருவைப் பெடை புணர்சேவல், குடுமி யெழாலொடு கொண்டு கிழக் கிழிய ” என்பது பழம்பாடலாகிய பதிற்றுப்பத்து (பதிற்று— ௩௬).

ஆசிரியர் தொல்காப்பியனார், தனித்தியங்கும் உயிரும் அதனைத் தொடர்ந்த மெய்யுமாகிய முப்பதெழுத்துகட்கும் அவை எழுந்தொலிக்கும் முறைமை கருதி முதலெழுத்து எனப்பெயர் கொடுத்தார்; பின், அவற்றினின்றும் பிரிந்து வேறுவிதமாக ஒலிவிளைத்துச் சார்ந்து நிற்பவற்றைச் சார் பெழுத்தென்றார். இங்ஙனமன்றி, வரிவடிவுநோக்கி இப்பிரிவு கள் செய்தாரல்லர். உயிர்மெய்யெழுத்துக்கு வரிவடிவு கூறி னார் “ புள்ளியில்லா வெல்லா மெய்யும் ” (தொல்-எழுத்து-௧௭) என்ற சூத்திரத்தில். ஆனல் அது ஒருவாறு வரிவடிவு கூறிற் றன்றி நன்கு புலப்படு மாற்றான் கூறிற்றில்லை; மாறாக, அவ் வெழுத்து ஒலிக்குமுறைமையே விரிக்கப்பட் டிருக்கிறது; அச் சூத்திரமும் அதனைக்கூறவே பெரிதும் எழுந்ததாகலின்.

இதனானும் எழுத்துக்கள் யாவும் ஒலி எழுந்தியங்கும் முறைமையானே பாகுபடுத்தப்பட்டன வென்பது உறுதியாயிற்று.

இனி, எழுதல் என்பது கீழிருந்து தானே உந்துதலான் அல்லது உந்தப்படுதலான் மேனோக்கிச் செல்லும் புடைபெயர்ச்சியாகிய ஒருவினை. உந்தியினின்றும் எழுப்பப் படுவதாய் வெளிப்போந்துவரும் இசை, அது வரும்வழியில் உண்டாம் திரிபுகளுக்கேற்ப வேறுவேறெழுத்தாக மாறுபடுகின்றது. இது கண்கூடு. அதனைக் காட்டில் வெளிப்படையாக வரிவடிவில் எழுதும் போழ்தும், தமிழெழுத்துக்களிற் பெரும்பாலன எடுத்த எடுப்பில் கீழ்நின்று மேனோக்கியே எழுதப்படுகின்றன. இதுவும் ஈண்டுக் கருதற்பாலதென்க.

இனி, எழுத்தியலைக் கடந்து சில புறச்செய்திகளையும் பார்ப்போம். சுருக்கமாகப் புணரியல் கூறும் செய்திகள்யாவும் ஒலியைப்பற்றியது. சொல், கிளவி, மொழி என்ற சொற்களெல்லாம் சொல்லப்படுதலானும், கிளக்கப் படுதலானும், மொழியப்படுதலானும் பிறக்கும் பொருளமைந்த ஓசை என்பதன்றி வரிவடிவாற்பெற்ற பெயருடையனவல்ல. இவைபோன்ற பிற மிகப்பல. இவையனைத்தும் உந்தியினின்று வெளிப்பட்டிசைத்த பலதிற ஒலியின் கூட்டமென்பதையும் கருதல் வேண்டும். இவை அங்ஙனம் எழுதலான் இவற்றிற்கு மெழுத்தெனப் பெயர்தரலாம் என்ற வினா இங்கு எழலாம். சொல் எழுதற்கு முன்பாக அதன்காரணமாய் எழுந்த எழுத்துக்கட்கே அப்பெயர் கூறப்பட்டமையின், அதன் காரியமாகும் அனைத்திற்கும் அதனையே கூறத்தொடங்கின், இரும்பாலியன்ற பொருள்கட்கெல்லாம் இரும்பென்றே பெயர் கொடுத்தாற்போலும் பழிப்புரை எய்தும். அன்றியும் **எழுதப்படுதலான்** எழுத்தென்று கொண்டு அவ்வகையே நோக்கினும் இவ்வினா எழாதிருப்பதில்லை. அதற்குக் கூறப்படும் விடையும் இங்ஙனமே என்க.

வெண்பா, அகவல், கலி, வஞ்சி, முதலிய யாப்பியல் தந்த பெயர்களும் செப்பல், அகவல், கலி, வஞ்சி ஓசையால் வந்தனவேயாம். ஏன் இவ்வளவுங்கூறவேண்டுமெனின், இலக்கணத்தில் பயிலப்படும் பலவேறு குறியீடுகளும் பெரும்பாலும் ஒலியடியாகவே பிறந்தன என்பதை உணர்தற்பொருட்டேயாம். எஞ்சியவெல்லாம் காரண மறியப்படாது நின்றன. அறியப்பட்டவை, வரிவடிவுபற்றியனவாகக் காணப்படவில்லை. எனவே, இதுகாறும் ஆய்ந்தமுறையால்,

உயிர் மெய், குறில், நெடில், வல்லினம், மெல்லினம் முதலான முதலெழுத்துக்களும் அவற்றின் பாகுபாடுகளும்;

குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் முதலான சார்பெழுத்துக்களும்;

இனவெழுத்து, மாத்திரை, பிறப்பு, அளபெடை, புணரியல் முதலான ஒலிபற்றி யெழுந்த குறியீடுகளும்;

சொல், கிளவி, மொழி முதலிய எழுத்தின் காரியமும்;

வெண்பா, அகவல்களிலே வஞ்சியென விரிக்கப்படும் பல செய்யுட்பெயர்களும்;

யாழுக்குரிய எழால் என்னும் பெயரும் பிறவும் ;

இசையெழுப்புதலாகிய காரணங்கொண்டே பெரும்பான்மையும் வழங்கப்பட்டன வென்பது விளங்கி நின்றது. எழுத்து என்பது, எழுந்து புறப்பட்டு இசைக்கும் ஒலி என்பதும் உணர்த்தப்பட்டது. இதனால் முற்கு, வீளை முதலான ஒலியைக்கொள்ளாது செவிப்புலனுக்குப் பொருளறியப்படும் வரம்பறுத்த அகர முதலாகிய எழுத்துக்களே தழுவப்படுவனவாம் ; அதுவே அடிப்படவந்த வழக்காதலின். கீழிருந்து மேலெழுதல் என்பதை வலியுறுத்த "எழு" என்பதனடியாப் பிறந்த "எழூஉ, எழால்" என்பனவும் எடுத்துக்காட்டாய் வந்துள.

இனி, முடிக்கு முகத்தான், இரண்டொன்று நினைவூட்டி முடிப்போம். பா என்பது பரந்துபட்டிசைப்பதோர் வகை தெரிந்த ஓசை ; இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி; கூட்டி யெழுதல் என்றவிவை, தமிழிலக்கணம் ஒலியடியாகக் கால்கொண்டு நின்றதை விளங்கக் காட்டினமைகாண்க. **எனவே, சொல்லப் பிறந்து சொற்கு உறுப்பாம் ஓசையைத் தொல்காப்பியர் எழுத்தென்று வேண்டுவரென உணர்க.** "நிலையும் வளியும் முயற்சியு மூன்றும்—இயல நடப்பதெழுத் தெனப்படுமே" என்றாராகலின்" எனக்கூறிய **நச்சினார்க்கினியருரையும்** இதற்குச் சான்று கூறிநிற்பது காண்க. ஆகவே, "உந்தியினின்று எழுந்து பொருள்தெரிய இசைக்கும் இசையே எழுத்து" என்ற ஒன்றே முடிந்த முடிபாமென்பதோடு இக்கட்டுரையையும் முடிக்கின்றோம்.

தைப் பொங்கல்

[வித்வான் பெ. கோவிந்தன்]

(நேரிசை ஆசிரியப்பா)

பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்
எங்கும் பொங்க லெனுமொலி சிறக்க.
தையெனுந் திங்கட் டலைநாள் பிறந்தது.
வையகம் பொலிக. மனக்கவ லொழிக.
மொய்யிரு ளகற்றும் முரண்மிகு ஞாயிறு
வைகல் தோறும் மாலை தோறும்
நெடுவிசும் பிவர்ந்து குடவரை யிழிந்து
மறைந்து செல்லுழிக், கரந்து நோக்கி,
உறைநனி சிதறி ஓரறி வுயிர்முதல்
ஆறறி வுயிர்வரை யனைத்தும் பனிப்புற்
றொடுங்கி உடம்பு நடுங்கி யுழலத்,
துனிசெய் பனிவெம் பொழுது தொலைந்தது.
பனியினும் நீரினும் பல்கி நோய்செய்
புழுவும் அணுவிற் புல்லிய வுயிர்களும்
வெய்யோன் வெம்மைக் குய்யும் வலியில.
பெய்ம்முகில் நோக்கிச் செய்ந்நில முழுது
வித்தி வளர்த்த விளைபயி ரெங்கும்
முத்தமிழ் தேர்ந்த மெய்த்தவர் போலச்
சென்னி வணக்கிப் பொன்னிறங் கொள்வ.
மங்கையர் கழுத்தின் வண்ணங் கவர்ந்து
பைங்கமு குயர்ந்து பவள மீனுவ.
நுங்கிற் றீநீர் நுகறற் களிக்கும்
செங்கரும் புயர்ந்து செழுமுத் திரைப்ப.
கொல்லை முல்லை மெல்லரும் பீன்று
மெல்லியல் மகளிர் பல்லெனத் தோன்றும்.
காந்தள் விரிந்து கைபோல் தோன்றும்.
தாழை மலர்ந்து தாது விரிக்கும்.
வாழை பழுத்துத் தேறல் வடிக்கும்.
தென்னை காய்த்துச் சென்னியிற் கொள்ளும்.
மாதுளந் தீங்கனி வனைகுடம் மானும்.
பீர்க்குப் படர்ந்து பிறங்கிக் காய்க்கும்.
அவரையுந் துவரையும் இகலிக் காய்க்கும்.
மஞ்சளும் இஞ்சியும் விஞ்சித் தோன்றும்.
சேனையும் வள்ளியும் செறிந்து தோன்றும்
எங்கும் தளிர்கள்; எங்கும் மலர்கள்;

எங்கும் காய்கள்; எங்கும் கனிகள்;
எங்கும் கிழங்குகள்; எங்கும் கூலம்.
உண்ணற் கினிய எண்ணில் பொருளையும்
கண்ணுற் காண்மின்; கருத்தால் நினைமின்.
விண்ணி லியங்கும் வெய்யோன், வெம்மையால்
தண்கடல் வெதுப்பி மின்முகி லாக்கி
மண்வளம் படமழை வழங்கினன். வானோர்
அமிழ்தினு மினிய அறுசுவை யுணவைத்
தமிழ்நில மடந்தை விளைத்துத் தந்தனள்
இன்றொரு நாளே ஈந்தன ளெனன்மின்.
ஒன்றிரண் டாண்டே உதவின ளெனன்மின்.
கருத்தி லாய்ந்து கணக்கிடும் அறிஞர்
புலத்திற் கெட்டாப் பொய்தீர் தமிழ்க்குலம்
நிலத்தில் தோன்றி நிலவிய நாள்முதல்
அளப்பில் காலம் அருளோ டீகுவள்.
தினைத்துணை நன்றி செயினும் அதனைப்
பனைத்துணை யென்று நினைத்துச் செயற்கருஞ்
செயல்பல செய்வார் செய்தார்க் கறிஞர்.
கலைவல் லாசான் களிமகிழ் வெய்த
பலகைம் மாறு பரிவோ டாற்றலாம்.
உணவுடை முதலிய உதவிய தந்தை
மனமகிழ் வுறக்கைம் மாறு புரியலாம்.
பெற்று வளர்த்த பேரரு ளன்னைக்
குற்றுழிப் பற்பல உதவி யியற்றலாம்.
கதிரவற் காற்றும் கைம்மா றுண்டோ?
அதிர்கடல் நிலத்திற் காற்றுஞ் செயலென்?
பொய்ம்மை கடிந்து போற்றுத லன்றிச்
செய்நன்றிக் காற்றும் செந்நெறி பிறிதிலை.

அதனால்,

பழம்பொருள் நீக்கி புதுப்பொருள் கொண்மின்.
நாடு வனப்புற நன்கணி செய்மின்.
வீடு விளங்க வெண்சுதை தீற்றுமின்.
தேர்செல் வீதியில் தோரணம் இணைமின்.
வாழையும் கமுகும் வரிசையில் நடுமின்.
கோல மிட்டுக் குடமுன் வைமின்.
நன்னீ ராடி நல்லுடை உடுமின்.
பொன்னணி யணிந்து பூமுடிச் சூடுமின்.
தொழுது நாளும் தொண்டு செய்யும்
பழுதி லேவலர் பசிப்பிணி போக்கி

உடையும் அணியும் உவந்து வழங்குமின்.
உழவுக் குதவும் உரங்கொள் ளேற்றினம்
எழில்பெற அணிசெய் திசைபெற இயக்குமின்.
செஞ்சந் தனநறுஞ் சேற்றால் மெழுகி,
வெண்முத் திடித்த மென்பொடி கொண்டு
கோல மிட்டுக், கொய்மலர் சிதறிக்,
கனியும் கரும்பும் காயும் கிழங்கும்
மஞ்சளும் நிரப்பி, மணச்சாந் தேற்றிப்,
பாக்கு வெற்றிலை பாங்குறச் சேர்த்தங்
காய்தம் போல அடுப்புப் புதுக்கி,
காய்வுறு சாந்தம் காரகில் எரித்து,
மின்செய் பொற்கலம் மிளிர ஏற்றி,
இன்சுவை தரும்பா லெடுத்து வாக்கிச்,
செந்நெல் லரிசி சீர்பெறச் சொரிந்து,
கண்டு பருப்பு கமழ்தரு ஆனெய்
செங்குங் குமப்பூ திகழும் ஏலம்
அளவிற் பெய்து துழாவி நயம்பெறப்
பொங்கல் செய்மின் ; பொங்கல் செய்மின்.
பொங்க லமுதொடு பொரிக்கறி புளிங்கறி
இஞ்சிப் பச்சடி யினையன சமைத்துப்
படைத்துப் பனிப்பகை செகுக்கும் பல்கதிர்க்
கடவுட் பருதியைக் கைதொழு தேத்துமின்.
உண்ணும் உணவும், உடுத்தும் உடையும்,
வண்ண அணியும் வழங்குந் திறமும்,
பண்ணமர் செந்தமிழ் பயிற்றுந் திறமும்
எண்ணி யெண்ணி யின்றமிழ் நாட்டை
மனமொழி மெய்களால் வணங்குமின்
இனமும் ஏவலர் குழுவு மியைந்தே.

அழகநம்பி

[வித்துவான். அ. சிதம்பரம் அவர்கள்]

கண்ணன் மேனியின் வண்ணம் (நிறம்) போல விளங்கும் பசுமைமிக்க பெருங்காடு ஒன்று உண்டு. அக்காட்டில் பல வழிகள் பிரிந்து பிரிந்து சென்றன. அக்காட்டினுள் புதிதாக நுழைவோர் வழி தெரியாது தடுமாறுவர். அக்காட்டின் பக்கத்தில் முல்லையூர் என்ற ஒரு ஊர் உண்டு. முன்பு அவ்வூரில் இடையர் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஆடு மாடுகளை மேய்த்தும் பயிர்த்தொழிலைச் செய்தும் காலம் கழித்தனர். அவ்விடையர் குடியில் அழகநம்பி என்ற பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் தனது குடியிலேயே பிறந்த அலர்மேல்மங்கைமீது அன்புபாராட்டி வந்தான். அவ்விருவரது அன்பாகிய அரும்பு காதலாகப் பூத்து விளங்கியது. காதலர் இருவரும் பலமுறை மறைவாகக் கூடிக்கூடி, காதல் இன்பத்தைத் துய்த்து வாழ்ந்திருந்தனர். இவ்வாறு நாட்கள் பல சென்றன அலர்மேல் தனது காதலன் பரதையர் தொடர்புடையான் என்று ஐயுறவு கொண்டு, பிணங்கி இருந்தாள். அவள் ஒருநாள் காட்டின் பக்கத்தே உள்ள கொல்லைக்கு (காட்டுநிலத்துக்குச்) சென்று கொண்டிருந்தாள். அழகநம்பி தற்செயலாக அங்கு வந்தான்; அவளைக் கண்டான். கண்டதும் அவன் மனம் அன்பால் உருகியது. ஆனால், அலர்மேலோ அவனை அன்போடும் பார்க்கவில்லை; இனிய நல்ல பேச்சும் பேசவில்லை. உடனே அழகநம்பி அவளை நோக்கி,

"நங்காய்! அழகிலக்கணத்துக்குத் தக்கபடி உன் உடம்பு அமைந்திருக்கிறது. அல்குல், தோள், கண் என்ற மூன்று உறுப்புக்களும் பெருத்துளளன. நெற்றி, இடை, அடி என்ற மூன்று உறுப்புக்களும் சிறுத்துள்ளன. நினது அழகின் உதவிகொண்டே காமனும் பிறர்க்கு மனக்கவலை செய்கின்றான். அதுமட்டுமோ! அவனே, உனது அழகில் மயங்கி அம்பைக கையினின்றும் நழுவவிடுகின்றான். இத்தகைய அழகியாகிய நீ, முன்னொரு நாள் ஊரில் திரிந்து மோர் விற்றுத் திரும்புகையில் சிரிப்பதில் மிகவும் வலலவள் என்று சிரித்தாய். பின்னர், பகைவரிடத்துப் புகுந்த பாண்டியன் படைகள் அப்பகைவர் அழியுமாறு படைதொடுப்பதுபோல, நான் உயிரோடு சாவும்படி கண்ணாகிய வாளை வீசிய பகைமை உடையவளே! நான் உன்னிடத்திற் செய்த குற்றம் என்ன? அதனை எனக்கு விளங்கச்சொல்!" என்றான்.

அதுகேட்ட அலர்மேல், அழகநம்பியைச் சிறிது சினமும் புறக்கணிப்பும் தோன்றப்பார்த்து, "ஊரில் அலைந்து மோர் விற்கு மவள் என்று கூறினாய் அல்லவா? மோர் விற்றுத்திரி கின்றது எமது குடிக்கு மிகவும் புதியதல்ல. எமது சுற்றத்தார் எல்லாம் இடையர்; ஆகவே, நாங்கள் இடைச்சியர். அஃதிருக் கட்டும்; காயாம் பூவால் செய்த கண்ணியையும் துவர் ஊட்டிய கரிய அடையையும் உடையவனாய், மேய்கின்ற பசு மந்தை முன்னே ஒரு கோலை ஊன்றி நிற்கின்ற நீ இடைய னல்லவோ? ஓ! ஓ!! தேவருள் ஞாயிறாகிய தெய்வத்தின் மகனோ?" என்றாள். (குந்தி கன்னிகையாய் இருக்கும் போதே சூரியனைச் சேர்ந்து பெற்ற கன்னனோ என்று சுட்டி, முறைதவறிப் பிறந்தவனோ என்று ஏளனம் செய்தாள்.)

அதுகேட்ட அழகநம்பி அலர்மேலை நோக்கி, "நீ இவ்வாறு இகழ்ந்து கூறுதலால், நான் உன்னோடு ஒன்றும் பேசமாட் டேன். உனது பற்கள் முல்லை அரும்பையும், மயில் இறகின் அடியையும் வரிசைப்படுத்தி வைத்ததை ஒத்திருக்கின்றன; தோள்கள் மூங்கிலை ஒத்திருக்கின்றன; உனது மையுண்டகண் கள் பெரிய சண்டையைச் செய்வனவாய் உள்ளன; இத்தகைய உனது நலத்தைப் பிறர் அல்லவா விரும்ப வேண்டும்? அவ்வா றில்லாமல் உன்னை நீயே விரும்பியிருக்கின்ற இறுமாந்தபேச்சை யுடையவளே! உனக்கு யார் விடை கூறுவார்? என்றான்.

அதுகேட்ட அவள், "அப்படியானால் நீ ஒன்றும் பேசாதே," என்றாள்; என்றவுடனே அழகநம்பி அலர்மேலை நோக்கி, 'இதோ உன்னை அப்புறம் போகாமல் தடுக்கிறேன்', என்றான். அது கேட்ட அவள், தன் மனத்துக்குள் 'இவன் நமக்குத் துன்பத்தைத் தருகிறானே' என்று கூறி, அதன்பின் வெளிப்படையாக,

"இளங்குழந்தைகள் அல்லவோ நீ கூறும் இந்த ஏமாற்றுச் சொற்களைக் கேட்டு நம்புவர்? நீ மனம் மிகவும் விரும்பிச் சொல்லாத சொற்களைச் சொல்லுகிறாய். என்னைக் கண்ட பொழுது, கடன்கொடுக்க வேண்டியவர்களிடத்துக் கொடுத்த வர்கள் அவரவர்களுக்குள்ள பண்டங்களைக் கேட்பதைப்போல, நீயும் என்னிடத்துள்ள பண்டங்களை இவை யாவை? என்று கேட்ட வஞ்சனையாலே எனது கூடையைப் பிடித்தற்கு ஏடா! நான் உன்னிடம் வாங்கிக்கொண்ட பொருள் என்ன?" என்றாள்.

அது கேட்ட அவன், "நீ என்னிடத்து வாங்கிக் கொண்ட பொருளைச் சொல்லுகிறேன்; கேள். ஒருநாள் செம்முல்லை நெருங்கின காட்டினிடத்துச் சிறிய ஆற்றுப் பக்கத்திலே நீ மோர் விற்றுத் திரும்பிவந்துகொண்டிருந்தா யல்லவா? அப்

போது மாம்பிஞ்சைப் பிளந்ததைப் போன்ற வடிவுடைய உனது கண்ணாலே எனக்கு உரித்தாகிய என் நெஞ்சை உனக்கு இருப்பிடமாக வாங்கிக் கொண்டாய். இப்படிப்பட்ட நீ ஒரு திருடி அல்லவா? இதை நீ அறியாதவளா?" என்றான். அது கேட்ட அவள், "உன் நெஞ்சை எனக்கு இருப்பிடமாக வாங்கிக் கொண்டு, நான் அதை அடிமைத் தொழில் புரியச் செய்தல் எவ்வாறு எளிதானதாகும்? மேலும், நம்பி! உன்னுடைய மனம், கொல்லையில் உள்ள என் அண்ணனுக்குச் சோற்றை எடுத்துக்கொண்டு போய்க் கொடுக்குமோ? பசு மந்தையில் உள்ள என் தகப்பனுக்குப் பால் கறக்கும் ஏனத்தை எடுத்துக்கொண்டுபோய்க் கொடுக்குமோ? அறுவடையான தினைக் கொல்லையிலே தாய் மேயவிட்ட கன்றை மேய்க்குமோ? இவைகளைச் செய்யாதல்லவா? ஆதலால், உனது மனத்தை எனக்கு இருப்பிடமாகக் கொண்டு அடிமைப் படுத்துதல் என்றால் இயலாத செயலே ஆகும்," என்றாள்.

அது கேட்டு அவன், "இனி நீ இட்ட வேலைகளை என்நெஞ்சு உறுதியாகச் செய்யும்" என்று கூறினான். மேலும், "கடைந்த மோரைக் கையால் அலைக்கும் ஓசை கேட்கும் அவ்வளவு அருகிலே ஊர் உள்ளது. பொழுதோ உச்சிப் பொழுது! நங்காய்! உனது அழகில் ஈடுபட்ட என் கண்கள் வேறொரு வடிவைக் காணவும் கூசுகின்றன. மயிலின் கழுத்து நிறத்தை ஒத்த நிறமுடைய மாயோளே! இவ்வளவு வெப்பமான நேரத்திலேயே விரைந்து செல்கின்றாயே! இதனால் நீ அடையும் பயன் என்ன? அதோ பார்! குளிர்ந்த சோலை; அச்சோலையில் எவ்வளவு காயாம்பூக்கள் மலர்ந்து கண்ணைப் பறிக்கின்றன. அச்சோலையின் அருகே பெண்யானைகள் தூங்குவன போல் அமைந்த பாறைகள் உள்ளன. அப்பாறையில் வெட்டின நுங்கின் கண்போன்ற சுனைகள் பல உள்ளன. அவ்வழகிய சுனைகளில் மூழ்கி விளையாடு. அதன் பின் செம்முல்லை மலரோடு வெண்முல்லை மலரையும் பறித்துத் தொடுத்து அணிந்து என்னுடனே தங்கியிரு; பொழுது குளிர்ந்ததும் உன் ஊருக்குச் செல்வாயாக!" என்றான்.

அதுகேட்டு அவள், "நீ போகவேண்டாம் என்கின்றாயாதலின், நான் போவேன்" எனப் பிணங்கிக் கூறினாள். மேலும், அவள் நம்பியை நோக்கி, "நம்பி! மானை ஒத்த மருண்ட பார்வையையும் குளிர்ச்சியையும் உடைய கண்ணினராகிய சிறிய ஆய்ச்சியரிடத்தில் உனது மயக்கு மொழிகளைக் கூறு. அவர்கள் உனது மயக்குமொழிகளைக்கேட்டு மயங்குவார்கள். நான் உனது மொழிகளால் மயங்கமாட்டேன். நீ விழித்திருக்கும் பொழுதே விழியைப் பறிக்கின்ற வீரனல்லவா? நீ

பிறர்க்கு என்ன நன்மை செய்வாய்? இத்தன்மையை யுடைய உனக்கு நான் என்ன நன்மை செய்வேன்?'' என்றாள்.

அதுகேட்டு அவன், "நங்காய்! உன் கண்கள் கொலைத் தொழிலைச் செய்கின்றன. உனது பற்கள் கூரியனவாய் உள்ளன. கொய்யப்படும் தளிர்போல உனது உடம்பின் நிறம் அமைந்திருக்கிறது. இத்தகைய அழகமைந்த ஆரணங்கே! உன்னைவிட என் விருப்பத்திற்கு உரிய சிறந்த மகளிர் வேறு எவரும் இம்மண்ணுலகத்தில் இல்லை. இதை நீ உறுதியாகத் தெரிந்துகொள். அதுநிற்க, நீ என்னிடத்துள்ளது என்று நினைத்த தவறுகள் எவையும் உறுதியாக என்னிடத்தில் இல்லை. அதைப்பற்றி உறுதி சொல்லி உன்னைத் தெளியச் செய்வதற்கு என் அருகில் வா! இதோ! மலையை ஒத்த மார்பினை உடைய திருமாலடியைத் தலையால் வணங்கிக் கையால் தொட்டு உறுதி கூறுகிறேன். நான் உன்னைத்தவிர வேறு எவரையும் மனத்தி லும் நினைக்கவில்லை'' என்றனன்.

அதுகேட்டு அவள், "உனது இச்செயலை உண்மையென்றே எளிதில் மயங்கும் அறிவில்லாத மகளிரே உன்னைச் சேர்வதற்கு ஒப்புவர். நீ கூறிய உறுதி தவறுபவன். ஆனாலும் நீ படும் துன்பத்திற்காகவே மிகவும் இரங்குகின்றேன். அதனாலேயே உன்னைச் சேர உடன்பட வேண்டியிருக்கிறது நீ எமது புழைக் கடையிலுள்ள காஞ்சிமரத்தின் அடியில் வந்துசேர். தேன்வளம் நிரம்பிய பொதியின் மலையையுடையவன் எமது பாண்டிய மன்னன். அவனது சிறுகுடியில் வாழும் எம்மவர் அவ்வேந் தன் நெடிதினிது வாழத் தெய்வத்தை வழிபடுவர். அவ்வழி பாட்டு ஆரவாரத்தாலே வந்த உன்னுடைய மகளிர் உன்னைக் காணாதபடியும், காஞ்சிப்பூவின் தாது பரவிய மன்றத்திடத் தே ஆடும் குரவைக் கூத்திடத்து வந்த உனது மகளிர்க்குக் கேட்காதபடியும், குழலில் ஆம்பல் என்னும் இசையை இசைத்து வருவாயாக'' என்றாள்.

அதுகேட்ட அழகநம்பி அலர்மேலை நோக்கி, "நங்காய்! இன்னும் என்னை நீ நம்பாதிருப்பது சரியல்ல. என்னைக் காண வும், என்னிடம் பேசவும், வேறு எம்மகளிரும் இலர். இது உண்மை. நல்லது; நீ, மொழிந்த குறியிடத்தில் வந்து சேர் வேன்'' என்று கூறிச்சென்றனன். பிறகு அவளும் தன் கொல் லைக்குச் சென்றனள். அவள் குறித்தபடி அழகநம்பி அன்றிரவு காஞ்சிமரத்தின் அடியை அடைந்தான். அலர்மேல் நங்கையும் அவ்விடத்தை அடைந்தாள். இருவரும்கூடி இன்பம் எய்தினர்.

குறிப்பு:—கலித்தொகை முல்லைக்கலி (8) "இகல் வேந்தன் சேனை இறுத்தவாய்போல'' என்ற பாட்டைத் தழுவி எழுதப்பட்டது.

எதிரொலி

[திரு. N. K. வேலன் அவர்கள், பி. ஏ.]

எதிரொலியினைப்பற்றிய ஆராய்ச்சி மிகவும் வியக்கற்பாலதாக இருக்கின்றது. இவ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கியவர் [1]மார்க் டுவெயின் என்னும் மேல்நாட்டு அறிஞர். ஓரிடத்தில் தோன்றும் ஒலி அலைவடிவமாகச் சென்று பல இடங்களிலும் பரவுகின்றது. கண்ணாடியிற் படும் ஒளிக்கதிர் மீண்டும் திருப்பி அனுப்பப் படுவது போன்று ஒலி அலைகள் ஏதேனும் ஒரு பொருளின்மேல் மோதுண்டால் அவ் அலைகளும் அங்ஙனமே திருப்பி அனுப்பப்படுகின்றன.

இங்ஙனம் திருப்பி அனுப்பப்படும் எதிரொலிகள் சில ஒலிகளைப் பெருக்கியும், சில ஒலிகளைத் திருத்தியும் அனுப்புகின்றன. எதிரொலியினை இயற்கை [2]ஒலிபரப்பி எனக் கூறினும் பொருந்தும். ஒலி பெருக்கிக் கருவிகள் இல்லாமலே எதிரொலிகள் பெருக்கமடைந்து நெடுந்தொலைவிலுள்ள இடங்களுக்குப் போய்ச் சேருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் [3]ஆல்ப்ஸ் மலையின் ஊடே செல்லும் இருப்புப்பாதையில் ஒரு பெரிய வெடிவிபத்து ஏற்பட்டது. இவ் வெடி ஓசை இருபது மைல் வரையிலுள்ள ஊர்களுக்குக் கேட்டது. நூறு மைலுக்கு அப்பாலுள்ள ஜெர்மனி நாட்டின் எல்லைப்புறங்களிலும் அவ் வோசை கேட்டது. ஆயினும் 20 மைலுக்கும், 100 மைலுக்கும் இடையில் 80 மைல் தொலைவிற்கு அவ் ஓசை கேட்கவில்லை. ஒலி அலைகள் 80 மைல் தொலைவிற்கு ஏன் தாவிக் குதிக்கவேண்டும் என்பதைக் குறித்துப் பல அறிஞர்கள் ஆராய்ச்சி செய்தனர். 20 மைல்வரை கேட்கப்பட்டது வெடி யோசை என்றும், 100 மைலுக்கு அப்பால்தோன்றியது அதன் எதிரொலி யென்றும் அவர்கள் கண்டுபிடித்தனர். மலைக்குகையில் தோன்றிய வெடி யோசை ஒரு மேகத்தில் மோதுண்டு பெருக்கமடைந்திருக்க வேண்டுமென்றும் அதன் எதிரொலி 100 மைலுக்கு அப்பாலுள்ள இடங்களில் கேட்கப் பட்டதென்றும் ஆராய்ச்சியாளர்கள் முடிவுகட்டினர்.

முகம் பார்க்கும் கண்ணாடிகள் வளைந்திருந்தால் நமது உருவம் பருத்தும் சிறுத்தும் பல கோணல்களாகவும் காணப் படுவதுபோன்று, ஒலி அலைகளும் வளைந்த பொருள்களின்மேல் மோதுண்டால் பல்வேறு மாறுதல்கள் அடைந்து இடம்விட்டு

1. Mark Twain. 2. Radio. 3. Alps.

இடம் பாய்கின்றன. இங்கிலாந்தில் [1]ஆக்ஸ்ஃபோர்ஷைர் என்னுமிடத்திலுள்ள பள்ளத்தாக்கில் ஏதேனும் ஓர் ஓசை உண்டானால் அஃது இருபது முறை திருப்பிக் கேட்கப்படுகின்றது. இங்ஙனமே [2]உவேல்ஸ் என்னும் ஊரிலுள்ள இரும்புப்பாலத்தை ஒருமுறை தட்டினால் அதிலிருந்து 576 ஓசைகள் கிளம்புகின்றன.

உட்புறம் வளைந்த கண்ணாடிகள் நம் உருவத்தைப் பெரிதாக்கிக் காட்டுவதுபோல் சில எதிரொலிகள் ஓசையைப் பெரிதாக்கிக் காட்டுகின்றன. [3]சிசிலித்தீவில் உள்ள ஒரு குகை தகரத்தை அசைப்பதால் உண்டாகும் மெல்லிய ஓசையைப் பீரங்கியில் தோன்றும் வெடி யோசையைப்போல் காட்டுகின்றது. இலண்டன் மாநகரில் [4]செயின்ட் பால்ஸ் கதீட்ரல் என்னும் கோவிலின் ஒரு முனையிலிருந்து குசு குசு என்று பேசினாலும் 102 அடிக்கு அப்பாலுள்ள மற்றொரு முனையில் தெளிவாகக் கேட்கின்றது. வளைந்த இடங்களிற் படும் ஒலி பன்மடங்கு பெரிதாகி ஒலிப்பதனாலேயே இங்ஙனம் கேட்கமுடிகின்றது. சிசிலித்தீவில் 120 அடி உயரமுள்ள ஓர் அரசியற் கட்டடம் உள்ளது. அதன்கீழ் அறையில் மூச்சு விட்டாலுங் கூட அவ் ஓசை 120 அடிஉயரத்திலுள்ள மேல் மாடியில் மிகவும் தெளிவாகக் கேட்கலாம். [4]டயோனீஷியஸ் என்னும் கொடுங்கோல் மன்னன் தன் பகைவர்களை இக் கட்டடத்தில் அடைத்துவைத்து அவர்கள் ஒருவரோடொருவர் மெல்லிய குரலிற் பேசிக்கொள்வதை அவர்களுக்குத் தெரியாமல் மேல்மாடியிலிருந்து அறிந்து கொள்வது வழக்கமென்றும் கூறப்படுகின்றது.

ஞாயிற்றின் வெண்மையான ஒளியை முப்பட்டைக் கண்ணாடியில் படும்படி செய்தால் அவ்வெண்மை ஒளி ஏழு நிறங்களாகப் பிரிந்து வெளியில் வருகின்றது. இங்ஙனமே ஒலி அலைகளும் சில வேளைகளில் உடைபட்டுப் பலதிறப்பட்ட ஒலிகளாக மாறுபடுகின்றன. [6]மன்டோனா என்னும் இடத்தில் ஆற்று வெள்ளத்தின் ஓசை எதிரொலியினால் சங்கு ஊதுவது போன்றும் நரி ஊளையிடுவது போன்றும் கேட்கிறதாம். பல ஆண்டுகளுக்கு முன் சுற்றுப்புறங்களில் வசித்திருந்த மக்கள் அவ்வோசைகள் பேய்களாலும் ஆவிகளாலும் உண்டாவதாக எண்ணி அங்குச் செல்வதற்கும் அஞ்சி இருந்தனராம். இவையனைத்தும் எதிரொலியால் ஏற்படும் விந்தைகள் எனப் பிற்காலத்தினர் கண்டுகொண்டனர்.

1. Oxfordshire. 2. Wales. 3. Sicily. 4· St. Paul's Cathedral. 5. Dionysius. 6. Montona.

எதிரொலியின் உதவியால் கடலின் ஆழத்தை அளக்கலாம். ஒலி அலைகள் ஒரு மைல் போவதற்கு 5 விநாடிகள் செல்லும். ஒலி அலைகள் காற்றில் செல்வதைப் போன்று ஐந்து பங்கு விரைவுடன் நீரில் செல்கின்றன. கடலின் உள்ளே ஓசையைக் கிளப்பி அவ் ஒலி அலைகள் கடற்கரையில் மோதி விட்டுத் திரும்புவதற்கு ஆகும் நேரத்தை அளந்து கொள்ள வேண்டும். இதிலிருந்து கடலின் ஆழத்தைக் கணக்கிட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

சில எதிரொலிகளின் தன்மைகள் ஆராய்ச்சிக்கு எட்டாதனவாக உள்ளன. இங்கிலாந்தில் ஓர் எதிரொலி பெண் குரலை மட்டும் திருப்பி அனுப்புகின்றது என்றும், ஆண்குரலை அது ஏற்றுக்கொள்வதில்லை என்றும் கூறுகின்றனர். இத்தகைய எதிரொலிகள் தமக்கு ஏற்ற ஒலிகளை மட்டும் பொறுக்கி எடுத்துக் கொண்டு ஏனைய ஒலிகளைத் தள்ளிவிடுகின்றன. எதிரொலி ஆராய்ச்சியினின்றும் இன்னும் எத்துணையோ உண்மைகள் வெளிவரக்கூடுமென உலகம் எதிர்பார்க்கின்றது.

உப்பு, நிலக்கரி, நீறு, காற்று ஆகிய நான்கு பொருள்களைக் கொண்டு ஒரு பசைச்சத்தைச் செய்து அதிலிருந்து பட்டு நூல் நூற்றெடுக்கும் புதியமுறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. செம்மையும் சிக்கனமுமான இம்முறையினால் பட்டுநூல்கொண்டு செய்யப்படும் பல பயனுடைப் பொருள்கள் இனி மிகவும் நயமாகச் செய்யப்படும் என்று அறிஞர் நம்புகின்றனர்.

அறிவின்மையைப் போக்குவ தெப்படி?

[கருவூர், ஈழத்துச் சிவாநந்த அடிகள், பி. ஏ.]

நமது தமிழ்நாட்டில் தாய்மொழிக் கட்டாயக் கல்வி இல்லாததால், நமது நாட்டுமக்கள் எவ்வளவு பிற்போக்கான நிலையை அடைந்துள்ளார்கள் என்பது யாவரும் அறிந்ததே. இது வரை அரசியற் பொறுப்பை ஏற்றுக் கல்வித் துறையில் தங்கள் கருத்தைச் செலுத்திவந்த தலைவர்களும் கட்டாயக் கல்வியின் இன்றியமையாமையை எண்ணி ஆவன செய்தாரில்லை. அவ்வப்போது கூட்டப்பெற்ற பேரவைகளின் வாயிலாகப் பொது மக்களின் ஆதரவைப் பெற்று முடிவு செய்யப்பட்ட கட்டாயக் கல்வி முடிபுகளையாவது அத்தலைவர்கள் ஓரளவு எண்ணிப் பார்த்து வேண்டுவன செய்ய முன்வந்ததாகவுந் தெரியவில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், நமது நாட்டில் அரசியற் றலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை தவறுடையதாக இருப்பதே. பிற நாடுகளிற் பெரும்பாலும், பொதுமக்கள் தாங்களாகவே, இன்னொருவருடைய தூண்டுதலின்றித், தங்கள் நாட்டுக்கு ஏற்ற தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை கையாளப்பட்டு வருகின்றது. ஆனால், நமது நாட்டில், தலைவராக வர விரும்புபவர்கள் தங்களுக்கிருக்கும் யாதாயினும்ஒரு செல்வாக்கைப் பயன்படுத்துவதன் வாயிலாகப் பொதுமக்களைக் கட்டாயப் படுத்தியும், வேறு வகையிலும் தாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் முறை பெரும்பாலும் கையாளப்பட்டு வருகின்றது. இந்த முறை நமது நாட்டுக்குப் பெருங் குறையாகும். இதற்குக் காரணம், நமது நாட்டு மக்களுட் பெரும்பாலார்க்குக் கல்வியறிவும், அதனால் ஏற்படும் உலகியலறிவும் இல்லாமல் இருப்பதே. கல்வியை அடிப்படையாகக்கொண்ட உலகியலறிவைப் பெற்ற எவரும் தங்களால் மேற்கொள்ளப்படும் எச்செயலையும் ஆராய்ந்து பாராது, பிறர் சொல்வதை மட்டும் நம்பி, ஒரு முடிவுக்கு வரமாட்டார்கள். எனவே, இப் பெருங் குறை ஒழிதற்கு, நம் நாட்டிலுள்ள தமிழறிஞர்கள் எல்லாரும் ஒருங்கு சேர்ந்து கட்டாயக் கல்வியின் இன்றியமையாமையைப் பெரிதும் வற்புறுத்தி, அதனை நடைமுறையிற் கொண்டுவரச் செய்தல் வேண்டும். அதோடு,

இப்போது தமிழ்நாட்டில், சங்கங்கள், சபைகள், நிலையங்கள், கழகங்கள், என்றற்றொடக்கத்தனவான ஒரு பொருட் பல்பெயர்க் கிளவிகளாம் பற்பல பொது மன்றங்கள் உள்ளன. அவையெல்லாம் சிறப்பாகத் தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்கென நிறுவப்பட்டனவேயாம். அவற்றுட்

பற்பல, சமய வளர்ச்சிக்குரிய முறைகளைக் கையாள்வனவாயும்; சிற்சில இன (சமூக) முன்னேற்றத்திற் காவனவற்றைச் செய்வனவாயும்; ஒரு சில, வேளாளர்-நாயுடு-யாதவர்-செங்குந்தர்-கள்ளர் என்பன போன்ற பிரிவுகளில், தனித்தனிக் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு, தத்தம் சாதி-குலம்-பிறப்பு முன்னேற்றங்களைக் கருதி உழைப்பனவாயும் காணப் படுகின்றன. இனி, இவையன்றிக் கிறித்தவ, முகம்மதிய மன்றங்களும் உள்ளன. அவையும் பெரும்பாலும் தத்தம் சமய வளர்ச்சி ஒன்றிலேயே கருத்தைச் செலுத்துவனவாகக் காணப்பட்டாலும், மக்களின் அறிவின்மையைப் போக்குவதற்கான முறைகளையும் ஓரளவு கடைப்பிடித்து, கல்வி அறிவின் வாயிலாகவே சமயப்பற்றும், பிறநலங்களும் உண்டாகச் செய்கின்றன. இந்த முறை சிறப்பாகக் கிறித்தவ முன்னேற்றக் கழகங்களில் கையாளப்பட்டு வருவதை நாம் காண்கின்றோம். கிறித்தவசமயம் நம் நாட்டில் பரவியதற்குக் காரணம், கிறித்தவக்குருமார் எல்லாரும் தம் வயப்பட்ட மக்களுக்குக் கடவுணெறியையும் அதனால் ஏற்படும் நற்பயனையும் எடுத்துக்கூறியதோடு மட்டும் நின்றுவிடாமல், ஏழை எளியமக்கள் எல்லாருக்கும் இயல்பாகவுள்ள உரிமைகளையும், அவர்களின் வறுமைப் பிணி நீங்குவதற்கான பலதொழிலின் முறைகளையும், கல்வி அறிவையும் அரசியலாரின் துணைகொண்டு வகுத்துக்கொடுத்ததே.

இங்ஙனமே மேனாடுகளில் உள்ளமக்கள் அனைவரும் தாங்கள் பள்ளிக்கூடங்களிற் படிக்கும் நூற்கல்வியோடு மட்டும் நின்று விடாமல், தொழிற்கல்வி கற்பதற்கான பலதிறப்பட்ட கழகங்களையும் நிறுவி அவற்றின் வாயிலாக அறிவிற்சிறந்து, ஆராய்ச்சித் துறையுட்புகுந்து பல புதுமைகளைக் கண்டு பிடித்து, அவற்றின் வாயிலாகத் தாமும் தம்மைச் சார்ந்தாரும் வறுமையும் கவலையுமற்ற நல்வாழ்க்கையில் திளைத்திருக்கின்றனர். இம்முறை நமது நாட்டிற் பெரிதும் கையாளப் படுவதில்லை. நமது நாட்டிலுள்ள சமயக்குருக்கண்மாரும், பிற சமயத்துறைத் தலைவர்களும் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்கின்றார்கள் என்று துணிந்து சொல்லுதற்கில்லை. ஏனென்றால், அவர்களுட் பெரும்பாலார் சமயவளர்ச்சிக்கும், மொழி, கலை வளர்ச்சிக்குமெனப் பண்டைய அரசர் பெருமக்களால் ஒப்படைக்கப்பட்ட பெருந்தொகைப்பொருள்களை யெல்லாம் தங்கள் ஆடம்பரவாழ்க்கைக்குப் பயன்படுத்தி வருகின்றார்களே யொழிய, மக்களின் நன்மையைக் கருதி, அவர்களுக்காக எதுவுஞ்செய்ய முன்வருகின்றார்களில்லை. இதற்குக் காரணம், கேட்பாரின்மையேயன்றிப் பிறிதொன்று மன்று என்பது வெளிப்

படை. ஒவ்வொரு மடங்களிலும் முடங்கிக்கிடக்கும் பொருட் பெருக்கை நோக்குவார்க்கு, அது எத்தனை பள்ளிக்கூடங்களை வைத்து, மக்களின் அறிவின்மையைப் போக்குவதற்கு உதவி புரியுமென்பது தெளிவாகும்.

இனி, நான் மேலெடுத்துக் காட்டியபடி, பொதுநலமன் றங்களை வைத்து நடத்துபவர்கள், தங்கள் எண்ணம் நிறை வேற வேண்டுமானால், முதலில் மக்களுக்கு ஒருவர்சொல்லும் பொருளின் கருத்தை உணர்ந்து கொள்வதற்குக் கருவியாக வுள்ள அறிவை உண்டாக்க முயலுதல் வேண்டும். பொது மன்றங்களில் ஆற்றப்பெறும் சொற்பொழிவுகளைச் செவிமடுக்க வரும் மக்கள் எல்லாரும் ஓரளவுக்காவது கல்வியறிவு பெற் றிருந்தாலன்றி, கல்வியறிவில் முதிர்ந்த பேரறிஞர்கள் தாம் திறம்பட உரைக்கும் அரியகருத்துக்களை எல்லாம் கேட்டு நுகர்ந்து இன்புறுதல் இயலாது.

எனவே, மக்களின் அறிவின்மையைப் போக்கி, அவர் களை முன்னேற்றம் அடையச் செய்வதற்குக் கட்டாயக்கல்வி இன்றியமையாத தென்பதோடு, ஒவ்வொரு பொது மன்றத் தலைவர்களும் தத்தம் கழகங்களில் இப்போது நடைபெற்று வரும் பயன்தரா முயற்சிகளைச் சிறிது கைவிட்டு, மக்கள் அனை வர்க்கும் எழுத்தறிவிக்கும் முறையைக் கையாளுதல் வேண்டும். இளையவர் முதியவர் என்ற வேறுபாடில்லாமல் எல்லாருக்கும் கல்வியறிவை உண்டாக்க வேண்டும். **சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார்** முதியவர்கல்வி கற்பதற்கு மிக எளிதான முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு பொதுமன்றங்களும் இந்த அரிய முறையைக் கடைப்பிடித்து வருவார்களானால், ஓராண்டில் குறைந்தது பத்தாயிரம் முதியவர்களாவது கல்வியறிவு பெறுவரென்பதில் ஐயமின்று. பொதுமன்றத் தலைவர்கள் ஒவ்வொருவரும் "**தானே தமிழ் கற்கும் முறை**" என்ற நூலைத் தங்கள் கழகங் களில் வாங்கி வைத்துப், பொழுது போக்குவதற்காகவும், வேறு வகையிலும் அங்கு வந்து சேரும் முதலியவர்கள் கையில் ஒவ்வொரு படியைக் கொடுத்து, அதன் வாயிலாகப் பொழுது போக்கச் செய்வார்களானால், அம் முதியவர்கள் மிக விரைவில் கல்வியறிவைப் பெற்று விடுவார்கள். பள்ளிக் கூடங்களுக்குச் சென்று கல்வி பயிலாது ஆடுமாடு மேய்த்துக் கொண்டு திரியும் சிறுவர் சிறுமிகட்கும் இந்நூல் கல்வி யறிவை உண்டாக்கப் பெரும் உதவிபுரியும். படிப்பிற் றங்கள் கருத் தைச் செலுத்தாது படங்களைப் பார்த்து மகிழ விழையும்

பள்ளிச் சிறார்க்குத் "தானே தமிழ் கற்கு முறை" என்ற நூலில்உள்ள ஒவ்வொரு படமும், அச்சிறாரின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், அவர்களைக் கல்வி கற்கும் துறைக்கு ஈர்த்துச்செல்லும் பெற்றியில் படங்களை அமைத்திருப்பதால், பள்ளிச்சிறாரும் இந்நூலைப் பயின்று பழகுதல் இன்றியமையாததாகும். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், கட்டாயக் கல்வித் திட்டம் இல்லாத நமது நாட்டுக்கு இந்நூல் பெரும்பயன் தருவதாகும். ஆகவே, இந்த முறையை நமது நாட்டுமக்கள் கையாண்டு அறிவின்மையைப் போக்க முயல்வார்களாக.

நீத்தார்கடனும் தமிழர்மரபும்

[வித்துவான் திரு. மா. இராசமாணிக்கம், B. O. L.]

இந்தியாவில் சரித்திரமுறைப்படி ஆரியர் வந்தகாலம் ஏறக்குறைய கி. மு. 2500 என்று ஆராய்ச்சியாளர்கூறுவர். அதற்குமுற்பட இந்தியா முழுவதும் இருந்த மக்கள் **திராவிடர்** என்பது சரித்திர ஆராய்ச்சியாளரும் மொழி ஆராய்ச்சி வல்லுநரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.[1] ரிக்வேதத்தில் ஆரியரால் ஒதுக்கிச் 'சிசினதேவ' என்று இகழப்பட்ட **சிவலிங்க வணக்கம்** இன்றும் திராவிடர்க்கே உரியதாயிருத்தல் ஒன்றே—ரிக்வேதகாலத்தில் பஞ்சாப் பிரதேசத்தில் ஆரியர் தங்கியிருந்தபோது, சிவலிங்க வணக்கத்தராய திராவிடமக்கள் இருந்தமை நன்கு வெளியாம். இன்று பஞ்சாப், சிந்து என்னும் மாகாணங்களில் புதையுண்டு அகப்பட்ட நகரங்களில் உள்ள சிவலிங்கப் பொருள்களாலும் பிறவற்றாலும் அவற்றுள் வாழ்ந்த மக்கள் திராவிடராக இருத்தல் வேண்டும் என்பது நடுநிலை ஆராய்ச்சியாளர் துணிபு.[2] அஃது உண்மையாயின், அத்திராவிடர் நாகரிக காலம்—வேதகாலத்துக்கு முந்திய கி.மு. 3000-ஆகும்.

உடல் அடக்க முறைகள்

அச்சிந்துப் பிரதேச திராவிடர், இறந்தபின் உடலை எரித்தும் **புதைத்தும் வந்தனர்** என்பது தெரிகிறது. சில வீடுகட்கு அடியில் உடற்சாம்பல் மண் சாடிகளில் அடக்கம் செய்யப்பட்டு இருந்தன.[3] இறந்தவர் உடற் சாம்பலைப் பாத்திரத்துள் அடக்கித் தம் வீட்டடியில் புதைத்து வைத்தல் அக்கால மரபு போலும்! அங்ஙனம் புதைக்கப்பட்ட இடத்தின்மீது இறந்தவரை நினைந்து '**படையல்**' இடல் மரபாக இருந்திருக்கலாம். என்னை? இன்றும் திராவிடர் (சிறப்பாகத் தமிழர்) இல்லங்களில் நடுவீட்டுப் படையல் இறந்தவர் பொருட்டுப் போடல் மரபாக இருந்து வரலால் என்க. புகைப்படம் பிடித்தல் முதலிய வசதிகள் இல்லா அப்பழங்காலத்தில் இறந்தவர் நினைவைக் கொள்ள அவர் உடற் சாம்பலைத் தம் வீட்டடியிற் புதைத்து வைத்தல் இயல்பே அன்றோ? அங்ஙனம் புதைக்கப்

1. ' Pre-Aryan & Pre-Dravidian in India" P. 86; 'Origin & Development of the Bengali Language ' by S. K. Chatterji, P. 41—45; P. T. S. ' s' Stone Age in India, P. 43.

2. Sir John Marshall's 'Religion of the Indus People' in his first Volume & Father Heras's articles in the 'New Review' 1936.

3. 'Pre-historic Civilization of the Indus Valley ', P. 36-38.

பட்ட இடத்தண்டை இறந்தவர்க்குப் படையல் இட்டு வழி படலும் குடிப்பிறந்தார் செயல்தானே?

தமிழகத்தில் எரித்தல், இடுதல், குழி தோண்டிப் புதைத் தல், பள்ளங்களில் இட்டு மூடிவைத்தல், தாழியிற் கவித்தல் என்று ஐந்துவகைப் பழக்கம் இருந்துவந்ததாகத் தெரிகிறது. மணிமேகலையின்[1] காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு ஆதலா லும், அக்காலத்தே தமிழகத்தில் பலபாடை மக்களும் வசித் திருந்தனர் ஆதலாலும் இவ்வைவகைப் பழக்கங்கள் எவர் எவரைச் சார்ந்தவை எனத் திட்டமாகக் கூறல் இயலாது. எனி னும் இடுகாடு—சுடுகாடு என்பன சங்கநூல்களில் பலப்படப் பயிறலானும் இன்றும் தமிழர் இவ்விரு வழக்கங்களே கொண் டிருத்தலானும் சுடுதலும் புதைத்தலும் தமிழர் பழக்கங்கள் என்னல் பொருந்தும். தாழியிற் கவித்தல் என்பது தமிழர்க்குச் சிறப்புடைய தொன்றும். தாழி என்பது மண்ணாற் செய்த பெட்டி; மூடியுடையது. அதில் இறந்தவர் உடலை உட்கார வைத்து, மணலும் அரிசியும் பாதியளவு கொட்டி, அக்கலவை மீது இறந்தவர்க்கு உகந்த தானிய வகைகள், பிற உணவுக் குரிய பொருள்கள் வைத்து, அவர் கையாண்ட கருவிகளும் வைத்து, தாழியை மூடிப் பூமிக்குள் புதைத்து விடல் மரபு. அதன்மீது கற்பாறையிட்டு மூடப்படும். அதன்மீது மேலும் மணலைப் பரப்பி உயர்ந்த வட்டப் பாறையால் மூடுதல் மரபு; அதனைச் சுற்றிலும் ஒரு முழ உயரம் உள்ள கற்களை நாட்டுவர். இத்தகைய புதைக்கப்பட்ட இடங்கள் பல பாண்டிய நாட்டின் கண் புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் நிரம்ப இருக்கின்றன. பல தாழிகள் கண்டு எடுக்கப்பட்டன. இன் றும் எடுபடாமல் இருப்பவை பல. பெல்லாரி ஜில்லாவில் மாத் திரம் இத்தகைய தாழிகள் 2000-க்கு மேலாக அகப்பட்டன. இத்தாழிகளில் 4 அடி உயரம், 3½ அடி குறுக்களவு உடைய வையே பெரியவை. பல்லாவரம் (சென்னைக்கருகில்) முதலிய இடங்களில் கால்பெற்ற தாழிகள் (ஒருவகை உயர்ந்த களிமண் ணால் செய்யப்பட்டவை) அகப்பட்டன.[2]

இங்ஙனம் இறந்தவரை வைத்த தாழியுள் அவர் விரும் பிய—கையாண்ட பொருள்களை வைத்தல் என்பது சரித்திரத் திற்கும் முற்பட்ட கற்காலத்திருந்தே இருந்துவரும் பழக்க மாக இருத்தலினாற்றான், இன்றும் தமிழர், இறந்தவர் ஆடை களையும் அவர் விரும்பிய உணவுப் பொருள்களையும் நடுவீட்டில்

1. Manimekalai—K. 6, lines 66, 67.
2. P. T. S. Iyengar's ' Stone Age in India ', P. 41, 42.

வைத்துப் படைத்தல் **தமிழர் மரபாக** இருந்து வருகிறது. இஃதன்றிப் புதிய ஆடைகளை வாங்கும் பொழுதும் நற்காரியங்கள் நடைபெறும் போழ்தும் இறந்தவர்க்குப் படையலிட்டு வழிபடல் தமிழர் மரபாக இருந்து வருகிறது.

கல் எடுப்பு விழவு

இங்ஙனம் புதைக்கப்பட்டவர் பொருட்டும் எரிக்கப் பட்டவர் பொருட்டும் அவரவர் தகுதிக்கு ஏற்பப் புதைத்த இடத்திலும், எரித்துச் சாம்பலைப் புதைத்த இடத்திலும் **கல் எடுப்பித்து**, அதன்மீது இறந்தவர் உருவம், பெயர், இறந்த காரணம், புகழ் இன்ன பிறவற்றைப் பொறித்து, அக்கல்லுக்கு மயிற்பீலியும் மாலையும் இட்டுத் தத்தம் குடிமரபுக் கேற்றபடி வழிபடல் பண்டைத் தமிழர் மரபாக இருந்தது.

> "இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
> குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
> சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்"
>
> "அரசர்க் கமைந்தன ஆயிரங் கோட்டம்"[6]

போரில் விழுப்புண்பட்டு இறந்த **மறவர்** (வீரர்) பொருட்டுக் கல் எடுத்து விழாச் செய்தலும் தமிழர் மரபாகும். இப் பழக்கம் தமிழரிடைப் பெருவரவிற்றாக இருந்தது என்பதைப் **புறநானூறு, அகநானூறு, தொல்காப்பியம்** முதலிய சங்க நூல்களால் நன்கறியலாம். **இந்நடுகல் வீரரே நாளடைவில் சிறு தெய்வ வழிபாட்டுக்கு உரியர் ஆயினர்.** இறந்த வீரன் பரம்பரையினர் அவ்வீரனைத் தம் **குலதெய்வமாகவும்** பிறவாறும் வழிபடலாயினர். அப்பழக்கமே இன்று தமிழகம் முழுவதும்—கிராமந்தோறும் உள்ள ஐயனார்—வீரன்—முனியன்—சங்கிலி கறுப்பன்— மதுரை வீரன்— முனியாண்டி—மாயாண்டி—முதலிய சிறு தெய்வ வழிபாடாகும். இவ்வுண்மை தெரியாத் தமிழ்நூற் பயிற்சி இல்லாத பலர் சிறுதெய்வ வழிபாட்டை இகழ்ந்துரைக்கின்றனர். 'நாங்கள்' இன்ன போரில் இன்ன காரணத்திற்காக இறந்துப்பட்ட இன்ன வீரன் மரபினர் என்று தம் முன்னோர் பெருமைகூறிப் பெருமிதம் கோடற்கும், இறந்த வீரர் கல்லைக் காணுந்தோறும் ஏனைய தமிழ்மக்கட்கு **நாட்டுப் பற்றும் வீரவுணர்ச்சியும்** உண்டாதற் பொருட்டும், அரசரும் ஏனைய வீரரும் இறந்த வீரரைக் கனப்படுத்தும் பொருட்டும் எழுந்ததே '**நடுகல் விழவு**'. இங்ஙனம் நடப்பட்ட நடுகற்கள் அப்பழங்காலத்தே தமிழகம் முழுவதும்

1. Manimakalei—K. 6, lines 57—59, 166.

ஆங்காங்குப் பரவி இருந்தன என்பதைச் சங்கநூல்களால் நன்கு அறியலாம். 'நீ போகும் வழியில் வீரன் கல்லைக் காண்பாய்; அதனை வழிபடாமற் போகாதே' என்று ஒருவனுக்கு ஒரு பெண்மணி கூறுதல் புறநானூற்றில் காணலாம். 'தெய்வமே ஆனான் திசைக்கு' என்று இறந்த வீரனை ஏனையோர் கொண்டாடி விழாச்செய்தமையும் தமிழ்நூல்களில் பரக்கக் காணலாம்.

இனி, இங்ஙனம் போரில் இறந்த வீரர்தம் பத்தினிமார் அவர்தம் ஆவியற்ற உடலைத் தழுவிப் போர்க்களத்தே இறத்தலும் உண்டு; போர்செய்து இறத்தலும் உண்டு; தீப்பாய்ந்து இறத்தலும் உண்டு; அத்தகைய மங்கையர் நினைவுக்கு அறிகுறியாகக் கல்எடுத்துக் கோவில்கட்டி வழிபடலும் தமிழர் மரபாகும். 'தீப்பாய்ந்த அம்மன் கோவில்' என்பது இன்றும் திருநெல்வேலி ஜில்லாவில் பல இடங்களில் காணலாம். இத்தகைய கோயில்கள் தமிழ்நாடெங்கும் உண்டு. நாளடைவில் அக்கோயில்கள் 'தீப்பாய்ந்த' என்னும் தொடர்கொண்டு திரௌபதி அம்மன் கோவில்களாக மாற்றப்பட்டு விட்டன; வடநாட்டுப் பாரதக்கதையும் தமிழகத்தில் புகுந்துவிட்டது. இது, பிற்காலத் தமிழர் அறியாமையால் போந்த தவறுகள் பலவற்றுள் தலையாயது. வீரத்தையும் கற்பையும் விளக்கி மாண்ட பத்தினிகளையும் தமிழர் சிறப்புச்செய்து வழிபட்டு வந்தனர் என்பதற்குக் கண்ணகிக்குச் சேரன்கோவில் கட்டினமையும் அப்பத்தினி விழாவிற்குப் பல அரசர்கள் வந்திருந்தமையுமே சிறந்த சான்றாகும்.

இதுகாறும் கூறியவற்றால், சாதாரணமாக இறந்தோர்—போரில் இறந்தவர் — தீப்பாய்ந்தோர் — கற்பினைவிளக்கி மாண்டவர் முதலியோர்க்கு அவரவர் தகுதிக்கேற்பக் கல் எடுத்து விழாச்செய்தலும் கோவில்கட்டி விழாச்செய்தலும் பண்டை நம் மூதாதையர் கையாண்ட நாகரிகப்பழக்கம் ஆகும். அதன் உட்பொருளை ஆய்ந்து—அவர்தம் உயர் ஒழுக்கம் பாராட்டுந் தகைமையை உணர்ந்து பாராட்டி, அச்சிறுகோவில்களையும் நம் முன்னோர் மரபையும் காத்தலே அறிவுடைத் தமிழர் நீங்காக் கடமையாகும். நம்முன்னோர் வீரத்தையும் கற்பையும் சீரிய ஒழுக்கத்தையும் விளக்கும் பேரடையாளங்களாக உள்ள இச்சிறுகோவில்களை இன்றும் பழங்குடித்தமிழர் பாதுகாத்து வருதல் தமிழ்நாடு செய்த தவப்பேறே ஆகும். ஆயின், அம்மக்கட்குத் தமிழறிவு இன்மையால் உண்மை உணராது வழிபடுகின்றனர். அவர்கட்கு உண்மைவரலாற்றை விளக்கி அவர்

தம் சிறுதெய்வங்கள் வாயிலாகத் தமிழ்ப்பற்றையும் தமிழ்ப் பழங்குடிப் பெருமையையும் தமிழர் போர்வீரத்தையும் ஊட்டுதல் கற்றறிந்த தமிழர்—தமிழ்நாட்டுக்கு நன்மை செய்ய இருக்கும் பேரறிஞர் பெருங்கடனாகும்.

கைம்மை நோன்பு

கணவரை இழந்த பண்டைத் தமிழ்மாதர் (1) உடனே உயிர்விடல் (2) தீப்பாய்ந்து உயிர்விடல் (3) கைம்மைநோன்பு நோற்று உடலை வற்றச்செய்து மறுபிறவியில் கணவனை அடைய விரும்புதல் என்னும் மூவகைத் துறைகளைக் கையாண்டனர்.[7] முதல் துறைக்குக் கோவலனைக்கொன்ற பாண்டியன் கண்ணகியால் உண்மை உணர்ந்து அரியாசனத்திலிருந்து வீழ்ந்திறப்ப, அவன் **கோப்பெருந்தேவி** அவனருகில் வீழ்ந்து உயிர் விட்டமை தக்க சான்றாகும்.[8] இரண்டாந்துறைக்குப் பூத பாண்டியன் இறந்தவுடன் தன்னைத் தடுத்த சான்றோரை விலக்கி அவன் **பெருந்தேவி** நெருப்பில் வீழ்ந்து இறந்தமையே போதிய சரியாகும்.[9] மேற்கூறப் பெற்ற அரசமாதேவியே செய்த பாட்டில் மூன்றாந் துறைக்குரிய தமிழ்மாதரைப்பற்றிக் கூறியுள்ளாள். கைம்மை நோன்புடைய பெண்டிர் இலை இடையே பயின்ற கையால் பிழிந்து கொள்ளப்பட்ட நீர்ச் சோற்றுத்திரளுடனே வெள்ளிய எள் அரைத்த விழுதுடனே புளியிட்டுச் சமைக்கப்பட்ட வேளையிலைக்கறியை உண்ணுதல் மரபு; பாயின்றிப் பருக்கைகளாற் படுக்கப்பட்ட படுக்கையில் படுத்தல் மரபு. அல்லிக்காய் அரிசி உண்ணலும் மரபு. அம்மகளிர் பிடி (பெண்யானை) யினது அடிபோன்ற சிறிய இடத்தினை மெழுகித் தம் கணவர்க்குப் புல்மீது உணவு பிடித்து வைத்தபிறகு உண்பர்.[10] இறந்தவனுக்கு உணவு கொடுக்க வேண்டிச் சுளகுபோலச் சிறிய இடத்தைத் துடைத்து, அதனைச் சாணிகொண்டு தன் கண்ணீரால் மெழுகினள் ஒரு கைம்பெண் எனவரும் புறப்பாட்டுச் செய்தி உள்ளம் உருக்குவதாகும்.[11] இங்ஙனம் வருந்தும் கைம்மை மகளிர் கணவர் இறந்ததும் **வளையல்களைக் கழற்றிவிடல்** கைம்மைக்கு உரிய அடையாளமாகக் கருதப்பட்டு வந்தது. அப்பழங்காலத்தே, இன்று ஆட்சியில் உள்ள 'தாலி அறுத்தல்'—'தாலி கட்டல்' இல்லாமையால், **வளையலே மங்கல அறிகுறி** யாகவும், அது கழற்றப்படல் அமங்கல அறிகுறியாகவும் கருதப்பட்டு வந்தது:

7. Manimekalai, K. 2, lines 42—48. 8. Silappathikaram, K. 20, lines 79—81. 9. Purananuru, S. 246. 10. Purananuru, S. 234. 11. Purananuru, S. 249.

1. வெளிமான் (என்னும் வள்ளல்) இறந்தானாக, அவனுடைய நகரம், 'தொடிகழி மகளிரில் தொல்கவின் வாடியது' - புறம் - 238
2. கூந்தல் கொய்து 'குறுந்தொடி நீக்கி' - ஷை - 250
3. கொய்ம்மழித் தலையோடு கைம்மையுறக் கலங்கிய 'கழிகல மகடூஉப்போல' - ஷை - 261
4. கண்ணகி, கொற்றவைவாயிற் 'பொற்றொடி தகர்த்தாள்' (சிலப்.)

இவற்றால், கணவனை இழந்த காரிகையர் அவ்விறப்புக்கு அறிகுறியாக எல்லா அணிகளையும் களைதல் உண்டு; அவற்றுள் தொடி (வளையல்) நீக்கலே சிறப்பு; ஒரோவழித் தலைமொட்டை அடித்தலும் உண்டு என்பன போன்ற சுவை பயக்கும் விவரங்களை அறியலாம். மொட்டையடிக்கும் பழக்கம் கணவற்கென வாழ்ந்த மகளிர் பிற ஆடவர்க்குத் தம் எழில் விளங்கத்தோன்ற விரும்பாராதலின் உண்டான பழக்கமாகலாம். இவையன்றி வெள்ளை யாடை விதவையர் உடுத்தும் பழக்கமும் உண்டு. இது நூலுட் கூறப்படா விடினும், இப்பழக்கம் திராவிடருடையதே ஆகும். என்னை? கம்பர் வாலி மனைவியான தாரையின் விதவைக் கோலத்தை விளக்குகையில் அவள் வெள்ளை ஆடை உடுத்திருந்ததாகக் கூறுகிறார். இன்னும் தெலுங்கு நாட்டு விதவைப் பெண்டிர் அனைவரும் வெள்ளையாடை உடுத்தலைக் காணலாம்; பாண்டிய நாட்டுத் தமிழ்ப் பழங்குடிப் பெண்கள் அனைவரும் (விதவையர்) வெள்ளையாடை உடுத்தல் காணலாம். பாண்டிய நாட்டுச் சைவ வேளாளர் இல்லங்களில் எல்லாம் வெள்ளையாடை உடுத்தும் விதவையரைக் காணலாம். அப் பழங்குடிப் பெண்கள் எவ்வித அணிகளும் இன்றி இருத்தல் புறநானூற்றுத் தமிழ்க் கைம்பெண்டிரை நினைவூட்டுகின்றது வியப்பில்லை அன்றோ?*

எனவே, இதுகாறுங் கூறியவற்றால், (1) தமிழர் இறந்தவர் உடலை எரித்தல், புதைத்தல் செய்தனர்; கல்எடுப்பு விழாச்செய்து நீத்தாராய ('தெய்வமே ஆனான் திசைக்கு' என்றபடி ஆன) அவரைத் தம் குலதெய்வமாகவோ, வேறாகவோ வழிபட்டு வந்தனர்; படையல் இட்டனர்; இறந்தவர்க்குரிய ஆடை அணிகளைப் படைத்தனர்; புத்தாடைகளை வைத்துப் படைத்தனர்; இறந்தவரைப் பற்றி நினைக்குந்தோறும் அவர் தம் மேதகு குணங்களையும் செயல்களையும் எண்ணி இறுமாந்தனர்; உணர்ச்சி கொண்டனர்; என்பன போன்ற முற்றும் தமிழ்

* வெள்ளை ஆடை உடுத்தல், கடுமையான கைம்மை நோன்பு இருத்தல், தலைமொட்டை அடித்தல் என்பன புத்தமத நுழைவால் தமிழகத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் எனக் கோடலே பொருந்தும்.

மரபுக்கே உரிய (கலப்பற்ற) செய்திகள் அறியக் கிடக்கின்றன. இப்பழக்கங்கட்கு மாறான அனைத்தும் பிற்பட்ட காலங்களில் தமிழர் வாழ்க்கையிற் புகுந்தவை—தமிழர் மரபுக்கும் அறத்திற்கும் மாறானவை ஆகும். அவற்றை அடுத்த பகுதியில் ஆராய்வோம்.

பேராசிரியர் இரஃபேல் பெண்டாண்டி

என்பவர் ஓர் இத்தாலிய ஒளிநூற் பேரறிஞர். நெப்தியூன் என்னுங் கோளையும், இன்னும் நான்கு புதிய கோள்களையும் கண்டறிந்து கூறியவர்அவரே. தம்முடைய ஒளிநூ லாராய்ச்சியால் (Noah) நோவாப்பேரூழி கி. மு. 2687-ல் நடைபெற்றதென்றும், விவிலிய நூலிற் குறித்த காலம் சரியானதே என்றும் அவர் கூறுகிறார்.

நிலத்துளக்கம் (earthquake) கோள்களின் இழுப்பு ஆற்றலால் நேர்கின்றதென்பது அவர் கொள்கை. கி. மு. 10008-ல் அத்தகைய நிலத்துளக்கம் ஒன்று நேர்ந்ததென்றும், அதனால் அத்லாந்திக் கடலிலிருந்த அத்லாந்திக் தீவு கடலுள் அழுந்திற்றென்றும், அங்கு ஒரு தீவிருந்தது அறிவியலுண்மையேயன்றிப் புராணக்கதையன்றென்றும் அவர் முடிவாகக் கூறுகிறார்.

—"தி இந்து"—4-2-1940.

இனி, இறையனார் களவியலுரைப்படி, தலைச்சங்கம் 4440 ஆண்டும், இடைச்சங்கம் 3700 ஆண்டும், கடைச்சங்கம் 1850 ஆண்டும் ஆக முச்சங்கங்கள் மொத்தம் 9990 ஆண்டுகள் இருந்தனவென்று கூறப்பட்டுள்ளமை ஒருவாறு அறிவியலாராய்ச்சிக்கு ஒத்துள்ளது கண்டு மகிழ்க.

—கா. சிவ. க.

கால்டுவெல் ஒப்பிலக்கணம்

[காழி. சிவ. கண்ணுசாமி பி. ஏ.]

மலையாளம்—II

மலையாள மொழி தமிழிலிருந்து பன்னூற்றாண்டுகட்கு முன்னரே "உதித்தெழுந்த" கிளைமொழியே. ஆயினும், தமிழில் காணப்படும் [1]ஐம்பால் விகுதிகளை அம்மொழி ஒதுக்கியுள்ளது; மேலும், அளவுகடந்த வடமொழிச் சொற்களைத் தன்பாலேற்று அம்மொழி பயன்படுத்திவருகின்றது. இவையே அம்மொழிக்கும் தமிழுக்குமுள்ள தலையாய வேறுபாடுகளாம். இவ் வேறுபாடுகள் நோக்கியே, மலையாளம் தமிழின் இனமொழியா அன்றிக் கிளைமொழியா என்ற ஐயப்பாடு எழுந்ததாகும். இனமொழி என்று கொள்வதினும் கிளைமொழி என்று கொள்வதே ஏற்புடைத்தாம்.

தமிழிலிருந்து பன்னூறாண்டுகட்கு முன்னரே மலையாள மொழி பிரிந்ததாயினும், தமிழ்மொழியின் மாட்டுக் காணப்படும் மொழி வளர்ச்சியும், திருத்தமும், அதன் கண்ணும் காணப்படுகின்றன. பண்டைக் காலத்திலிருந்தே தமிழர்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளைக் கடந்து சென்று மேலைக் கடற்கரையில் வதிந்து வந்துள்ளமையால் இத்தொடர்பு காணப்படுகின்றது என்று எளிதில் ஊகித்துக்கொள்ளலாம். [2]"பெரிப்ளூஸ்" ஆசிரியர் மேலைக் கடற்கரையிலிருந்த [3]"நெல்குன்றம்" என்ற சிறந்த துறைமுகப்பட்டினம் தமிழ்மூவேந்தர்களுள் தலைசிறந்த மதுரைப் பாண்டியமன்னர்தம் ஆட்சிக் குட்பட்டது என்று குறித்துப் போந்தமை இக் கொள்கையை அரண் செய்வதாகும். மலையாள மொழியின் பண்டை இலக்கியங்களெல்லாம் வடமொழியைவிடத் தமிழ்மொழியையே பின்பற்றி வந்துள்ளனவாகக் காணப்படுகின்றன என்று [4]டாக்டர் கூண்டெர்ட் கூறுவதும் அதனையே தெளிவுறுத்தும். தமிழ் முதலெழுத்துக்களாகக் கணக்கிடப்படும் உயிருமுடம்புமா [5]முப்பதெழுத்துக்களுக்கும் புறம்பான பிற எழுத்துக்களைப் பண்டை மலையாள இலக்கியங்கள் கையாளாமல் ஒதுக்கி வந்துள்ளன என்றும், அவ்விலக்கியங்களிலுள்ள வரிவடிவமோ தமிழ்நாட்

---

1 போகிறேன், போகிறாய், போகிறான், போகிறது, போகின்றன என்ற ஐவேறு தமிழ் வினைச்சொற்களும் மலையாளத்தில் "போகுன்னு" என்ற ஒரே வினைச்சொல்லாற் குறிக்கப்படும்.
2. Periplus 3. Nelkynda 4. Dr. Gundert 5. முப்பத்திரண்டென்றார் கால்டுவெல்.

டில், அதிலும் தென்பாண்டி நாட்டில், கல்வெட்டுகளுக்குப் பயன்படுத்தப்பட்டுவந்த வட்டெழுத்துக்களைப் போன்றிருந்த தென்றும், கூண்டெர்ட் பெரியார் கூறியுள்ளார். மலையாள மொழியின் முதற் செய்யுளிலக்கியமாகக் கருதப்படுவது "இராம சரிதம்" என்பதேயாம். இது சிலநூற்றாண்டுகட்கு முன்பே எழுதப்பட்டதாகும். எனினும் இதன்கண் வட மொழி எழுத்துக்கலப்புக் காணப்படவில்லை. யூத பட்டயங்களி லும் சிரிய பட்டயங்களிலுங் காணப்படும் இலக்கண அமைப் பையே உடையதாகவும் இஃது இருக்கின்றது. இதை நோக்கும் போது மலையாள மொழியும் அதன் பிற்கால இலக்கியங்களும் எத்துணை விரைவில் வடமொழி மயமாக மாறிவிட்டன என்பது வியப்பையே அளிப்பதாகும். இத்துணை மாறுதலும் சென்ற இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்குள்ளாகவே ஏற்பட்டதாகும். இரண்டு அல்லது மூன்றே நூற்றாண்டு! எனினும் எத்துணை வடமொழிக்கலப்பு!! தமிழில் எவ்வளவுக் கெவ்வளவு வடமொழிக்கலப்பு குறைவாகக் காணப்படுகின் றதோ அவ்வளவுக் கவ்வளவு மலையாளத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றது.!!! மேலும், அதன் வரிவடிவமும், தமிழ் நாட்டில் வடமொழி எழுத்துக்களை எழுதக் கையாளப்படும் **கிரந்த** எழுத்துக்களின் வரிவடிவை யொட்டியே வகுக்கப் பட்டுள்ளதாகவும் கருதக்கிடக்கின்றது. ஆகவே, தமிழிலிருந்து ஒருசிறிது வேறுபட்டிருந்த மலையாளம் படிப்படியாக வேறு பாடுகள் மிக்கதாகி, தமிழின் கிளைமொழி யென்பது போய், உடன்றோன்றிய இனமொழியோ என்று கருதக்கூடிய தொரு நிலையை எய்திவிட்டது. மலையாள மொழிக்குத் தமிழே தாய்மொழி என்பதில் யாதொரு ஐயமு மின்று; எனினும் மலையாளமொழி இப்பொழுதுள்ள நிலையை நோக்கில், தாயின் தொடர்பை நீத்துத் தனிப்பட்ட வேற்றுருவைக் கொண்ட மகளொருத்தியைப்போன் றாய்விட்டது மலையாள மொழி என்றுதான் கூறுதல் வேண்டும்.

மலையாள மொழி தமிழின் கிளைமொழிதானா? ஆம்; கிளை மொழிதான். திசைகளைக் குறிக்க எழுந்த 'கிழக்கு' 'மேற்கு' என்ற இருசொற்களைக் கொண்டே மேற்கண்டவாறு விடை யிறுக்கலாம். கீழ் அல்லது அடி என்ற பொருளைக் குறிப்பது தமிழ்க் "கிழக்கு" என்னுஞ் சொல்; அவ்வாறே மேல் அல்லது உயரம் என்றபொருள் குறிப்பது தமிழ் "மேற்கு" என்ற சொல். இச் சொற்களைக் கொண்டே இவை மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கீழ்ப்புறம் இருந்த தமிழ்நாட்டு மக்க

ளிடையேதான் முதற்கண் தோற்றம் பெற்றுளவாதல் வேண்டும் என்று எளிதில் ஊகிக்கலாம்.

மேற்றிசையில் எங்கணும் ஓங்கி யுயர்ந்த மலைத் தொடர்! ஆகவே மேற்குத் திசை நோக்கிச் செல்லவேண்டின் வரவர மேலேறித்தான் செல்லல்வேண்டும். கீழ்த் திசையில் எங்கணும் பரந்து விரிந்த பனிக்கடல்! ஆகவே, கீழ்த்திசைநோக்கிச் செல்லவேண்டின் வரவரக் கீழ்நோக்கி இறங்கித்தான் செல்லல் வேண்டும். அதாவது, தமிழ்நாடு மேற்புறம் உயர்ந்தும், கீழ்ப் புறம் தாழ்ந்தும் அமைந்துள்ளது என்பதே. ஆனால் மலையாள நாடோ இதற்கு நேர்மாறான அமைப்பை உடையதாக இருக்கிறது. ஓங்கியுயர்ந்த மலைத்தொடர் கிழக்கிலும், பரந்துவிரிந்த பனிக்கடல் மேற்கிலுமாக ஆங்கு அமைந்துள்ளன. இவ்வாறிருந்தும், உயர்ந்த மலையமைந்துள்ள கீழ்த்திசையைக் குறிக்கும் சொல் மலையாளத்திலும் "கிழக்கு" என்பதேதான்! மலையாளம் தமிழ்தான் என்று கூறுவதற்கு வேறுசான்றும் வேண்டுமோ? மலையாளம் பேசும் மக்கள் எல்லோரும் பண்டைத் தமிழர்களே யல்லரோ? [1]பாலைக்காடு, கோயமுத்தூர் வழியாகப் பண்டைத் தமிழ்மக்கள் மேலைக் கடற்கரையை யடைந்து வடக்கே [2]சந்திரகிரிவரையிலும், தெற்கே திருவனந்தபுரத் தருகேயோடும் நெய்யாற்றுக் கரைவரையிலும் பரவியிருத்தல் வேண்டும். அவ்விரண்டு எல்லைகட் கப்பாலும் அவர்கள் செல்லாமைக்குக் காரணம் இரு மருங்கிலும் தங்களினத்தைச் சேர்ந்த பிறவகுப்பினர் முன்னரே ஆங்குப்போந்து உறைதந்திருக்கக் கண்டமையேயாம். "மலையாள அகராதி"யின் முன்னுரையில் அதன் ஆசிரியரான டாக்டர் கூண்டெர்ட் தமிழுக்கும் மலையாளத்திற்கும் பெருந்தொடர்புள்ள தென்பது உண்மையேயாயினும் முன்னதைப் பின்னதன் தாய்மொழியாகக் கொள்ளுதல் சரியன்றென்று எழுதியுள்ளனர். "கிழக்கு" "மேற்கு", என்ற சொற்களைக்கொண்டே மலையாள மக்கள் தமிழ்நாட்டிலிருந்து மேலைக்கடற்கரை போந்து குடியேறியவர்கள் என்று கொண்டுவிடலாகாது என்றும், ஆரியர்களைப் போலவே திராவிடர்களும் வடபாலிருந்து தென்பாற் போந்தவர்களானால், அவர்கள் முதலில் மேலைக் கடற்கரை (மலையாளம்) போந்து தங்கிய பின்னரே, கிழக்கே (தமிழ் நாட்டில்) புகுந்திருத்தல் வேண்டும் என்றும் அவர் தங்கருத்தை விளக்கியுள்ளார். "மேற்கு" என்று மலையாளிகள் பெரும்பாலும் மொழிவதில்லை என்றும் "படிஞாயிறு" என்றே வழங்கு

1. Palghat. 2. Chandragiri.

கின்றார்கள்" என்றும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார். ஆனால் "படிஞாயிறு" என்ற அச்சொல்லும் "படு ஞாயிறு" என்ற தமிழ்ச் சொல்லின் மலையாளத் திரிபேயாம். படுஞாயிறு என்பது மேற்கே தாழ்ந்துபடும் அல்லது மறையும் சூரியனைக் குறிப்பதாகும். "மேற்கு," "கிழக்கு" என்ற சொற்கள் தமிழ்ச் சொற்களே என்பதையும், அவை தமிழ் நாட்டில்தான் முதற்கண் தோற்றம் பெற்றன என்பதையும் டாக்டர் கூண்டெர்ட் ஒப்புக்கொள்கிறார். ஆனால் அவர் கருதியவண்ணம் தமிழ்மக்கள் மேற்கிலிருந்துதான் கிழக்கே போந்தார்கள் என்று கொள்வது, அஃதாவது, மலையாளம்தான் தமிழ் மொழியின் தாய்மொழி என்று சொல்வது இயற்கையமைப்புக்கும் மொழிவரலாற்றிற்கும் எவ்வாற்றானும் முரண்படுவதாகும்.

அறிவுநூற்கலையும் சமயமும்

[திரு. T. S. கந்தசாமி முதலியார், B. A.]

(முன் ௪௯௨-ம் பக்கத் தொடர்ச்சி)

வான ஊர்திகளில் பறந்து சென்று பகைப்புலத்தில் வீரப் படையெடுக்காநிற்க, அப்புலத்துள்ளோர் அவ்வூர்திகளைப் பறந்துசெல்லும் பறவைகளை வெடியால் சுட்டு வீழ்த்தும் வேடர்போல வானவூர்திகளையும் சுட்டுவீழ்த்தும் பெருந் துப்பாக்கிகளால் சுட்டு வீழ்த்துகின்றனர். வானிடை நின்று வெடிகுண்டுகள் வீழ்த்தி நகரங்களை எரிவாயூட்டுகின்றனர். தற்காலப்போரில் நடைபெறும் பேய்ச்செயல் முறைகளை நோக்கின் யார்க்கும் நடுக்கமுண்டாகின்றது. இத்தகைய போர்ச் செயல் முறைகளை உலகில் கொண்டுவந்து புகுத்தியது அறிவம் அன்றோ? பன்னூற்றாண்டுகளாகப் போற்றப்பட்டுக் கலையரணாகக் கருதப்பட்டு வந்த நகரங்கள் தீயினுக்கு இரையாக்கப்படுகின்றன. அறிவம் நாகரிகத்திற்குத் தாயாமெனினும் அதற்கே இயமனாக இன்று நடனம் புரிகின்றது.

அறிவத்தை ஒரு நங்கையெனக் கூறலாம். கலையை மடந்தையாக உருவகம் செய்தல் வழக்கு. அறிவ மங்கை இன்று எங்கும் பெருவீறு பெற்று நிலவுலகங்களில் திருநடம் செய்கின்றாள். ஆதலின் அவள் கோலத்தையும் நலத்தையும் கண்டு மக்களுட் பெரும்பாலார் வியப்பெய்தி, அவள் திருவடியிற் சரண்புகுந்து அவள் காலாலிட்ட குற்றேவல்களைத்

தலையால் செய்கின்றனர்; காணப்படுகின்ற இவ்வுலகமும் இவ்வுலகியலிற் றோய்ந்து புலன் நுகர்தலும் முறையே இன்ப வுலகமும் இன்பமுமாகக் கொண்டு வாணாளைக் கழிக்கின்றனர். இவ்வுலகத்தை யன்றி அதனைப் படைப்பாரும் காப்பாரும் அழிப்பாரும் இல்லையெனச் செருக்குடன் விளம்புகின்றனர். அறிவம் அழகுடையவள் ஆயினும் அவளழகு கட்டழகு அன்று; அன்றிக் கற்புடைய மகள் நலம்போல் தெய்வநல முடையது மன்று. அவளழகில் ஒரு பொய்மை கலந்துள்ளது; நஞ்சும் ஒருபாற் கலந்துள்ளது. அவள் நலமுண்ணத் தலைப்படு வார், நஞ்சையும் உடனுண்ண நேர்வர். நஞ்சுண்டகண்டனும் அவனடியாருமே அவள் நச்சு நலத்தால் தீமை யெய்தாதவர். அவள் கூர்த்தமதியுடையவளாயினும் தன்னறிவின் நலத்தைத் தானே மிக மதித்துச் செருக்கிப் பெருமித நடையொடு நடப் பளாதலின் மிகநுணுகிய உண்மைகளைப் பிழையறக்காணும் பெற்றியிலள். அவள் இக்காரணத்தால் விரைந்து ஒன்றை என்றும் பொய்யாமெய்யெனக் காண்பாள்; பிறரிடத்தும் பிடி வாதத்துடன் அஃதே உண்மையெனச் சாதிக்கவும் செய்வாள்; சிறிதுகாலம் செல்லத் தான்கண்ட அவ்வுண்மையையே அன் றென மறுப்பாள். இங்ஙனம் என்றும் பொய்யா உண்மையை அவள் அறியவுமாட்டாள். நிலவுலகம் ஞாயிற்றைச்சுற்றும் எனச் சொல்லும் இவ்வறிவ மங்கை நேற்று ஞாயிறு நிலத் தைச்சுற்றியது எனக்கூறினாள். இக்கணத்திலோ இருவருள் எவரையும் சுற்றுபவராகச் சொல்லலாம் என்றும், ஓய்வும் இயக்கமும் இன்னதன்மையன என்றுமட்டும் வரையறைசெய்து கொள்ளவேண்டுமென்றும மெல்லியகுரலாற் பேசுகிறாள்.

நிலவுலகத்திற்கு முதற்காரணம் அணு என்றாள். அவ் வணுவோ நுண் நுண் மணல்போன்றதென்றும், உருவமுடைப் பொருள் என்றும் கூறி, அவ்வுண்மையைக் கண்ட தன் நுண் ணுணர்வை நோக்கிச் செருக்குற்று ஏமாந்திருந்தாள். இன்று அவ்வணுவின் திறத்தை யாதென அவள் வகுத்துக் கூறுவதை நீங்கள் அறியீர்களா? அணு என்ற சொல்லே, அது பிரிக்கலா காப்பொருள் என்பதை யுணர்த்தும். அறிவமும் அணுவை அங்ஙனமே கருதினாள்; அணுக்கள் காணப்படும் பருப் பொருள்களின் பிரிக்கலாகா நுண்பொருள்கள் எனக் கூறி னாள். இன்றோ அவ்வணுவும் காரியப் பொருள் என, வாய் கூசாது மனம் நாணாது சொல்கின்றாள். அவ்வணுவை உடன் பாட்டெதிர்மறை மின்னங்களால் ஆகிய காரியப்பொருள் எனக்கூறுகிறாள். இனி அதை யென்னெனக் கூறுவாளோ யாரறிவார்?

இவ்வுலகம் ஒரு பொறியென்றும், அதன்கண் நிகழும் நிகழ்ச்சிகள் யாவும் காரணங்களின் வழி வருவன என்றும் காரணமில்லாது யாதும் யாண்டும் நிகழ்வதேயில்லை யென்றும், இன்று நிகழும் காரணங்களினின்றும் அவை யாவாய் முடியு மென்று கூறல் தனக்கெளிதா மென்றுங் கூறி மகிழ்ந்து முறு வல் செய்தாள். இன்று அக்கொள்கை சிறிது பிழையுடை யது எனக் கருதுகிறுள். உலக நிகழ்ச்சிகள் காரணகாரியத் தொடர்ச்சியாய்ச் சங்கிலித்தொடர்போல் வருமென்று சொன் ஞள். அவளே இன்று அதனின் வேருகப் பிறிதொன்றை மொழிவாள். உலக நிகழ்ச்சிகளிற் சில காரணமின்றி நிகழ் கின்றன என்றும், அவற்றை முன்னுணர்தலும் முன்னுரைத் தலும் யார்க்கும் கூடாவெனவும், அவைகள் காரண காரியத் தொடர்ச்சியாயில்லாது தவளைப்பாய்ச்சல்போல் காரணத் தொடர்பின்றி நிகழ்கின்றன என்றும் கூறுகிறுள். கதிரி (ரேடியம்) என்னும் பொருளை ஒரு பளிங்குக் குப்பியில் மூடி வைத்திருந்தால சிலநாட் சென்றபின் அது தன் நிறையில் குறைவடைகின்றது. நிகழ்ச்சிகளெல்லாம் காரணமின்றி வாரா வெனக்கூறிய அறிவ மங்கை இக்குறைவிற்குச் காரணம் கூற வகையறியாள்.

ஒளி பொருள்தன்மையுடையதெனப் 17-ம் நூற்றுண்டிற் கூறிஞள். பின் அதனையே அஃதில்லை ; அது வெறும் அலை யெனக் கூறிஞள். இன்றே அஃது அவ்விரண்டும் உடைய தென்பாள்.

இன்னும் இவள் கூறிய முன்பின் முரணுய கருத்துக்கள் எண்ணிறந்தன. அவற்றை யீண்டெடுத் துரைப்பின் மிகப் பெருகும். ஆதலின் அவற்றை யீண்டு விதந்து எடுத்து ஓதாது விடுத்தேன. ஆயினும் இதுகாறும் கூறியவற்றால் அறிவம் முடிந்த முடிவாகக் கருதிக் கூறியவை யெல்லாம் அல்லவாய் ஒழிந்தன என்றும், என்றும் அழியாது நிலை பெறும் உண்மைகளை யறியும் அறிவை அவள் பெற்றிலள் என் றும், அவள் அறிந்தது பின் அறியாமையாய் முடிவதால் அவள் விரிவிலா அறிவிலள் என்றும், சிற்றறிவின ளென்றும் போதரும்.

பௌதிகப்பொருள்களை யறியவல்லளேயன்றி உயிரையும் இறைவனையும் அவளறிய வல்லளல்லள். தான் எவற்றையும் ஆராய்ந்தறியும் மதுகையுடைய ளெனத் தன்னைத்தானே யறிந்து தருக்கு மியல்புடையளாதலின் தன் சிற்றறிவே விளக்காகக் கொண்டு, நீக்கமறவெங்கும் நிறைந்திருக்கும்

இறைவனும் பரம்பொருளை, உள்ளுள் ஒளிக்கும் சோரனை, இருந்தால் காண்பன்என்று சென்று, தன் அறிவாகிய கைவிளக்கின் துணையால் காணமுடியாமை பற்றித் தன் அறிவை யிகழாமல், "அண்டங்களையும் பேரண்டங்களையும் அணுவையும் பிறவற்றையும் துருவித்துருவிப் பார்த்தேன். யாண்டும் கடவுளில்லை" யென இசை பாடுவாள். அவ்விசை கேட்ட சிலர் மதிசாய்வர்

அறிவியற்கலை முற்றிலும் தீதென எண்ணற்க. அது நன்மையும் செய்ய வல்லதே. எனினும், அதற்குரிய இடம் இன்னதெனத் தேர்ந்து, அதற்குரிய இடத்தையும் பணியையும், அளிக்க வேண்டும். பணி செய்தற்குரிய ஒருத்தியை வீட்டின் தலைவியாக ஆக்கலாமா? அவளைப் பணிக்கே உரியளாக்கினால், அவள் பணிமிக நன்றாக ஆற்றுவாள், அன்றி அவளைத் தலைவியாக வாக்கினால், பணியும் ஆற்றாள், தலைவியாக இருந்து தீமையும் புரிவாள். பணிப்பெண் குற்றேவல்களை நன்றாகச் செய்வாள். ஆனால் தலைவியொருத்தி வேண்டும், அவளைப் பணியிற் படுத்தவும், நிறுத்தவும். இன்றேல் அவள் தான் நினைத்தவற்றை நினைத்தாங்கே செய்து முடிக்கக் கருதுவாள். அவளே தலைவியாக இருக்க நேர்ந்தால், மக்கள் நாகரிகமும், உயிர்வாழ்க்கையும் ஒருங்கே இறந்துபடும். சமயமும் ஒரு நங்கை. அவளே தலைவியாக இருக்கவும், அறிவ நங்கையைப் பணி கொள்ளவும் உரியள். சமயமே மக்கள் வாழ்க்கையைத் திருத்தி உயரச்செய்யும் ஆற்றலுடைய தேவ நங்கை. அவள் பொன் மொழிகளை உளமொன்றிப் பின்பற்றின், மக்கள் அவள் ஆசி பெற்று, அவள் மதிவழி நின்று, உளம் திருந்தப்பெற்று உணர்வும் திருந்தப்பெற்று, தத்தம்முள் பொருந்திவாழ் வகையறிந்து தத்தம்முள் கலந்து மகிழ்வர். சமயநலம் பெற்றார், அறிவ நலனையும் பெறின், அறிவ உண்மைகளைச் சமயக்கண் கொண்டு கண்டு, சமயநலன் காண அறிவக் கருவிகொண்டு ஆற்றுவர். அல்லாதார் பெறின், தந்நலத்திற்கே அறிவ உணர்வை அடிமைப்படுத்த முயல்வர். தந்நலமுடையார் பலர் தத்தம்முட் சூழிய வழியும் ஒன்றுசேரார், பொதுநலமுணரார். பேசுவது பொது நலமேயாயினும் தந்நலம் பற்றி ஒவ்வொருவரும் செயல்செய முற்பட்டுத் தம்முட் கலாம் விளைத்து இடர்ப்படுவர். இன்று ஐரோப்பாவில் அறிவ நங்கை பெண் கோலமிழந்து பேய்க்கோலம் கொள்ளவில்லையா? அங்ஙனம் அவள் கொண்டதன் காரண மென்னவென் றுசாவின், அவளை இறைவியாக்கி யன்னவட்கடிமை செய்ய மக்கள் முற்பட்டுத் தன்னலப் போரிலிறங்கியுள்ளமை யன்றோ ? இப்பூசல் என்று தீரும்? என்னவாய்முடியும்? சிறிது உன்னுங்

கள்! சமயநங்கை இறைவியாயிருத்தற்குரியள். எனினும் அவள் தன் இறைமைத்தன்மையை நாட்ட முற்படாள்; தன் பெருமையை அறிந்து தன் சரண் புகுவார் புகுக; அல்லார் புகாதொழிக என இருப்பாள்; அறிவம் போல், பிறர் கண் கவர் வனப் புடையளல்லள்; வஞ்சமிலள். அவள் தெய்வநலம், அவளை வழிபட முயல்வார்க்கே தோன்றும்; அவள் அறிவம் போல் பகட்டு எழிலும், பகட்டு மொழியுமுடையளல்லள். அறிவ நங்கை, தன்னை வணங்குவார்க்குப், பெருங்கொடை வழங்குவள் எனக் கூறி நடிக்கவும் செய்வாள். சமயமோ, தன் வலக்கை செய்வதை இடக்கை யறியாது செய்வாள். ஒருவன் தான் பெரிதெனை மதிக்கும் பொருள்களை விட்டொழித்துவர ஏவுவாள்; ஒருகால், ஒன்றும் பேசாது மோனத்தில் வீற்றிருப்பள். சமய நங்கை பணிவுடைய வடிவுடையாள், அருளுடைய மொழியுடையாள், அடக்கமுடையாள்; அமைதியும் நன்குடையாள். அறிவம், தருக்குடைய உருவுடையாள்; பெருமித நடையுடையாள், செருக்கு மொழி யுடையாள்; அடங்காமைக் குணமுடைய அமைதியிலா நெஞ்சுடையாள். சமயம் முற்றறிவுடையாள்; அறிவம் சிற்றறிவுடையாள்.

அறிவம், தான் அறியாத பொருளில்லையென்று தருக்கிக் கொலுவீற்றிருப்பாள்; யாரேனும் துணிந்து அவள்பால் உலகம் எங்ஙனம் உண்டாயதெனக் கேட்பின், அதற்கு அவள் கூறும் விடைகள் ஒன்றல்ல. ஞாயிறும் பிற விண்மீன்களும் விண்ணிடையிருந்து இயங்குகின்றன. ஞாயிற்றுக்கும் அடுத்து இயங்கும் விண்மீனுக்கு மிடையிலுள்ள இடைவெளி அளவிறப் புடையது. எனினும், விண்மீன் தன் சுற்றுவட்டத்தில் ஒருகால் ஞாயிற்றை நெருங்கியும், பிறிதொருகால் அகன்றும் செல்லும். அப்படி ஒரு பெரு விண்மீன், ஞாயிற்றினும் பலகோடி மடங்கு பெரியதொன்று, தன் சுற்றுவட்டத்தில் செல்லுங்கால் ஞாயிற்றை முன்னினும் அதிகமாக நெருங்க, ஞாயிறு இழுப்பத்தால் இழுக்கப்பட்டகாலத்து, ஞாயிற்றின் உடல் நலிவெய்தி அதன் ஒருபகுதி அம்மீனை நோக்கித் துறுத்தி வெளிக்கிளம்பி வந்து இறுதியில் அவ்விழுப்பத்தின் பெருமையால் அத்துறுத்திய பகுதி ஞாயிற்றினின்றும் புய்க்கப்பட்டுப் பல துண்டங்களாகவாயின. அத்துண்டங்கள் மீட்டும் அவ் இழுப்பத்தின் ஆற்றலால் விண்ணிடை நின்று இயங்குவன ஆயின. அவைகளே நிலனும் பிற கோள்களுமென்பர். இஃது ஓர் அறிவக் கொள்கை. இதையன்றென வேறு சில அறிவர்கள் மறுத்து வேறு கொள்கைகளை நாட்ட முயல்வர். உலகந்

தோன்றி 200 கோடி வருடங்களாயினவெனச் சிலர் கூறுவர். அவ்வுலகம அங்ஙனம் உண்டாகும்போது 6000 தீயளவை யுடைய ஞாயிற்றினின்று வீழ்ந்ததால் உயிர்வாழிடமாதலமை யாது ஆதலின் முதற்கண் இவ்வுலகத்தில் உயிர்களில்லை; உயிர்கள் தோன்றவுமில்லை. பிறவுலகத்தில் இன்றும் உயிர் வாழ அமையாதென்பர். உயிர்கள் வாழும் இந்நிலத்து உயிர் கள் தோன்றியவாறெங்ஙனமென, அறிவ நங்கை நானறி யேன் என்று விடைகூற நாணி, ஏதேதோ விடைபகர்ந்து, அவ்விடை கூறிய தானும் அமைவின்றி இருப்பள். உயிரில் பொருளும் உயிர்ப்பொருளும் வேற்றுமை பெரிதாய் நின்று, வர வரச் சிறிதாய் ஒடுங்கி, இன்று இல்லையெனலாம்படி மிகச் சிறியதாய் நிற்கின்றது என அறிவம் கூறினும் உயிரில் பொருளினிடை உயிர்ப்பொருள் தோன்றாது என்னும் உண் மையை மறுத்துரைத்து நிலைநாட்ட இயலாது, உயிர்வந்த வகைக்கு ஏதேதோ காரணங்கூற முயல்கின்றாள். அறபுத மில்லையென்ற அறிவ மங்கைக்கு உலகின்கண் உயிர்த்தோற் றம் அற்புதமாகவே யுள்ளது. உலகம் பிறிதொரு புறப்பொ ருளை அவாவாது தானே தனித்தறியப்படுமென்ற அறிவ மங்கை உயிர்த் தோற்றத்திற்குக் காரணம் யாதெனக் கூறு வாள்? உயிர்ஒன்று தோன்றிற்றென்றால் அவள் பிறஉயிர்களெல் லாவற்றிற்கும் அப்பொருளே காரணமாதல் அமையுமென்று நாட்ட வகையறிவாள். உள்ளன சிறத்தல் ஆகும் கொள்கையை நாட்டிய அறிவப் புலவர் டார்வின் என்பாரும் (உயிர்வகை களின் தோற்றம்) என்ற தமது நூலின் முடிவில் அடியிற் கண்டவாறு கூறுகிறார்: "உயிர்களிற் காணப்படும் பல்வேறு வகைத்தாய ஆற்றல்கட்கு வித்தாயவற்றை ஒரே உயிருள்ளோ அல்லது மிகச் சிலவானவற்றினுள்ளோ இறைவன் ஆதியில் வித்திட்டிருத்தல் வேண்டும் என்னு மிக்கொள்கையை நோக் கின் அதில் ஒரு பெருமாட்சிமை தோன்றுகின்றது. இக் கோளாகிய வையம் இழுப்பதத்தால் சுழன்று செல்லுங்கால் மேற்கூறிய ஒன்றிரண்டு சிற்றுயிர்கள் எண்ணிலா உருவங் களையும் அழகிய தோற்றங்களையும் மாறி மாறி அடைந்து இப்பொழுது காணப்படும் பல்வேறு வகைத்தாய எண்ணில் உயிர்கள் தோன்றியுள்ளன." இப்புலவர்பெருமான் ஓரறிவுயிர் முதல் மனிதன் வரையுள்ள எண்ணிலுயிர்களையும் அவற்றின் உடல்களையும் நுனித்தாராய்ந்து முடிவாக உயிர்கள்தாமே தோன்றா, அவற்றைத் தோற்றுவிக்கும் படைப்புக் கடவுள் ஒருவன் உண்டு என்று கூறும் அழகையும் நோக்குக. இவ்வுண்மையை யறியாத இக்காலத்து அறிவர் சிலர் உயிர்கள் தாமே தோன்றுமென தத்தமக்குத் தோன்றியவாறு கூறுவர்.

பேருலகில் காணப்படும் எண்ணில் கோள்களும் மீன்களும் ஆகியவை அந்தரத்தில் நின்று இடையறாது சுழன்றுகொண்டே உள என்பர். சுழற்சி முதற்கண் அவைகட்கு உண்டாய வாறு யாங்ஙனமென அறிவ மடந்தையை வினவின் அவள் யாது விடைபகர்வாள்? அவ்வண்டங்களில் சுழற்சி எவ்வகையாலோ உண்டாகியிருக்க வேண்டுமென்று தான் கூறுவாள். இயக்கம் ஒருகால் அவைகட் குண்டாயின் அவையென்று மொழியாது இடையறாது சுழலவல்லன என்று அறிவம் கூறினால் அதை நாம் அறியலாம். பேருலகிற் பெரிதாயதும், அண்டங்களையும் பிறவற்றையும் ஆட்டுவிக்கும் இயல்பு உடையதும் ஆகிய பெரும்பொருள் ஒன்று அவற்றை ஆட்டுவித்தல்வேண்டுமெனப் பெறப்படுகின்றது அணுவிலும் இடையறா இயக்கம் தாளத்தொடு இயைந்து நடைபெறுகிறது என அறிவர்கள் கூறுகின்றார்கள். அக்கூற்றையும் ஆராய்வார்க்கு அணுவிலும் அண்டத்திலும் ஒரேபடித்தாய் நீக்கமற நிறைந்துள்ள இறைவன் அணுவையும் ஆட்டுவிக்கின்றான் எனப் புலப்படுகின்றது. இவ்வுலகம் அணுக்களால் ஆக்கப்பட்டும், அணுக்கள் உடன்பாட்டெதிர்மறை மின்னத்தால் ஆக்கப்பட்டுமிருக்க அவை குறிப்பிட்ட ஒரு காலத்தில், குறிப்பிட்ட ஒரு தோற்றத்தை அடைவானேன் எனக்கேட்பார்க்கு இவ்வுலகம் தனது இயக்கத்திற்குப் பிறிதொரு பொருளை அவாவிநிற்கின்றது எனக் கூறினாலன்றி அறிவர்கள் அவ்வினாவிற்கு வேறு என்னவிடை பகரமுடியும்?

அறிவம் நாளடைவில் வளரும் என அறிவர்கள் கூறுகின்றனர். அஃது உண்மையென்பதை அறிவத்தின் வரலாற்றை நோக்குவார் காணலாம். எவ்வறிவு வளருமோ அது தளரவும் செய்யும், சிறுகவும் செய்யும். அத்தகைய, அறிவு எவ்வாற்றானும் முற்றறிவுடைய தாகாது. ஆதலின் உய்யும் நெறியறிந்து தாமும் பிறரும் நல்லாற்றின் மூழ்கி இன்பம் அடைய விரும்பும் அறிஞர் தம் குறிக்கோளை யடைவதற்கு அறிவத்தைத் துணைகொண்டு வாழ்க்கை நெறியில் நடக்கத் துணிந்தால் அந்நெறி அவரை இன்பத்துறைக்கண் ஒருகாலும் கொண்டுய்க்காது. அறிவுப்பேறும் இன்பப்பேறும் அல்லால் மக்களடையத் தகும்பயன்கள் யாவையுள? அறிவம் தானே தனித்து அப்பயன்களைத் தன்னையடைந்தார்க்குத் தரமாட்டாதெனக் கூறுகின்றேனேயன்றி அஃதவர்க்கு எப்பயனும் அளியாது என்று நான் கூறிற்றிலேன். மக்கள் அறிவுநூற்கலைகளை ஒரு தலையாகக் கற்றல் வேண்டும். அக்கலைகளின் பெருமையையுள்ளவாறு அறிதல் வேண்டும். அஃதாவது, அவற்றின் பெரு

மையையறிந்தாற் போலவே அவற்றின் குறையையும் ஒருங்கே யறிதல் வேண்டும். அங்ஙனம் அறிந்து சமயநங்கையின் அருள் பெற்று அவள் அருள்வழிநின்று ஒழுகி அறிவ நங்கையை, அவ்வருள்வழி நின்றொழுகும் பணிப்பெண்ணாகப் பெற்று வாழ்க்கைவழி நடந்தால் இன்பப் பேற்றையடைய லாம்.

பிளேட்டோ தமது "ரிப்பப்ளிக்" என்னும் மேதக்க நூலில் கலையறிவின் சிறப்பைப்பற்றிக் கூறும் பொன் மொழிகளை உங்கட்கு நினைவூட்டி இவ்விரிவுரையின் முதற்பகுதியை முடிக் கின்றேன். "அதோ தோன்றுகிறவற்றைக் காண்க! ஒரு நிலக்குகை அதன்வாய் ஒளிவரும் திசையை நோக்கி விரிந் துளது. ஒளியும் அக்குகையின் எம்மருங்கும் வீசுகின்றது. அக்குகையுள் மக்களாய்ப் பிறந்தார் வாழ்கின்றனர். அவர்கள் தம் குழவிப் பருவத்தினின்றே ஆங்கண் உறைகின்றனர். ஆனால் அவர்கள் கழுத்துகளிலும் கால்களிலும் சங்கிலி யால் அவர்கள் அசைய ஒண்ணாதபடி கட்டப்பட்டுள்ளனர். தம் கழுத்துகளைச் சங்கிலித் தொடர்பால் நினைத்த பக்கம் திருப்பமுடியாதபடி இருப்பதால், தம் கண் முன்புக்குமட்டும் பார்க்கும் ஆற்றலுடையராயுள்ளார். தம் தலைக்குமேல் பின் பக்கத்தில் வெகு தூரத்திற் கப்பால் தீ எரிகின்றது. அந்நெருப் பிற்கும் இங்ஙனம் சிறையுள்ளார்க்கும் இடையே மேட்டுநிலத் திற் செல்லும் ஒரு மேட்டுப்பாதையுளது. கூர்மையாக நோக்குவீராகின் அவ்வழியே தாழ்ந்துயர்ந்த சிறு சுவருமுள்ள தை நீங்கள் காணலாம்.

ஆமாம் பார்க்கிறேன்.

அச்சுவரின்மேல் சில மக்கள் பல கலங்களையும் பாவை களையும் மரத்தினாலும் கல்லினாலும் பிறவற்றானுமாய விலங்கு பறவைகளையும் பிற பாவைகளையும் தூக்கிச் செல்வதைப் பாருங்கள்! என்றேன்.

விசித்திரமான பாவையையும் விசித்திரமான கைதிக ளையும் காட்டினீர்கள்.

அவர்களும் நம்மைப்போன்றவர்கள் என்றேன். மற்றும் அவர்கள் தத்தம் உருவநிழலையும் நெருப்பின் ஒளியால் குகை யின் எதிர்பக்கத்திலுள்ள சுவரில் விளக்கப்படும் நிழல்களை யுமேயன்றிப் பிறவற்றைப் பாரார் என்று கூறினேன்.

அதற்கு அவர் சொல்வார்' ஆம் உண்மையே! அவர்களைத் தலையையும் அசைக்க வொண்ணாதபடி சிறைப்படுத்தப்பட்

டுள்ள நிலையில் உருநிழலையன்றிப் பிறிதுளதனை அவர்கள் பார்க்க முடியும்? அங்ஙனம் தூக்கிச்செல்லப்படும் பொருள் களின் நிழலைமட்டுந் தான் அவர்கள் பார்க்கமுடியும் என்றேன்.

ஆமாம் என அவர் விடை இறுத்தார். அவர்களுக்கு மெய் யாவதெல்லாம் பாவைகளின் உருநிழல்களாகவே அமையும் என்று கூறினேன்.

அறிவத்தின் அறிவும் உருநிழல் அறிவே மெய்யறிவா யமையுமன்றிப் பிறிதொன்றாக அமையாது எனக் கூறின், அஃது அறிஞர்யார்க்கும் ஒப்ப முடிந்ததாகும்.

மதிப்புரை

அரசகுல யூதன் அல்லது அடிமையை மணந்த சீமான்:—மதுரை திரு. வி. மரிய இருதயம் பிள்ளை அவர்கள் எழுதியது. 184 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 0-12-0. அமெரிக்க ஆசிரியராகிய லியூ வாலேஸ் என்பாரெழுதிய "பென்-ஹர்" என்ற கதையைத் தழுவி இக்கதையை எளிய தமிழ் உரைநடையில் ஆசிரியர் எழுதியிருப்பது பாராட்டற் குரியதாகும்.

மனிதனும் கடமைகளும்:—இராமவர்மபுரம் புதூர் திரு. க. சிதம்பர பிள்ளை அவர்கள் இயற்றியது. 167-பக்கங்கள் கொண்டது; **விலை** ரூ. 1-0-0.

உலகத்தில் நல்வாழ்க்கை வாழ்வதற்குரிய வகையில் மனிதன் நடந்துகொள்வதெப்படி என்பதைச் சிறந்த ஆராய்ச்சிக் கருத்துக்க ளுடன் இனிய எளிய தமிழ் நடையில் ஆசிரியர் எழுதி யிருக்கின்றார். தமிழ்நாட்டார் ஒவ்வொருவரும் பயிலவேண்டிய சிறந்தநூல்.

தமிழ்நூல் முறை:—திரு. P. R. மீனாக்ஷிசுந்தர முதலியார், B.A., B.L., எழுதியது. 71 பக்கங்கள் கொண்ட அழகிய சிறுநூல். விலை ரூ. 1-0-0. புதிய ஆராய்ச்சிக் கருத்துகள் இந்நூலில் வெளியிடப் பட்டுள்ளன. சாங்கியநூல் ஆதியில தமிழில் இருந்திருக்கக்கூடும்; தக்ஷிணாமூர்த்தி என்பது தமிழ்த் தென்னவனாகிய ஆதிரையானா யிருக்கலாம் என்பனபோன்ற சிறந்த புதுக் கருத்துக்களை ஆசிரியர் துணிந்து வெளியிட்டுள்ளமை வியக்கற் பாலதாகும்.

தஞ்சைத் திருக்கோயில்கள்:—தஞ்சை அரசர் திருக்கோயில் கண்காணிப்பாளர் திரு. ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் பி. எ. பி. எல். எழுதியது. 92 பக்கங்கள் கொண்ட சிறந்த ஆராய்ச்சி நூல். விலை. அணா 4.

சோணாட்டுப் பெரு நகராகிய தஞ்சையைப் பற்றிய பண்டைய வரலாறுகள் நன்காராயப்பட்டுத் தக்க மேற்கோள்களுடனும் ஆதாரங்களுடனும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் படித்தறிய வேண்டிய சிறந்த நூல்.

சோழர் கோயிற் பணிகள் :—இதுவும் திரு. ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதியதே. 50 பக்கங்கள் கொண்ட அழகிய நூல். விலை. அணு 6. மூவேந்தர்களில் நடுவணராகிய, சோழமன்னர்களது சிறப்பும் அவர்களுடைய ஆலயத் திருப்பணிகளும் இதன்கண் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியர் இத்துறையிற் காட்டும் ஊக்கமும் நுண்ணறிவும் புகழ்ந்து பாராட்டற் பாலதாம்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலைப் பொங்கல்மலர் :—காஞ்சிபுரத்தை யடுத்த வாலாஜாபாத்தில் ஒப்பரிய தமிழ்ப் பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவி வியக்கத்தக்க நன்முறையில் அதனை நடாத்திவரும் திரு. W. T. பஞ்சாட்சர முதலியார், திரு. W. T. மாசிலாமணி முதலியார் ஆகிய இருபெருந் தமிழர்தம் சீரிய திருத்தொண்டு இம்மலரில் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

பத்துப்பாட்டு மாநாடு

சங்க நூல்களில் ஒன்றாகிய பத்துப்பாட்டைப்பற்றியமாநாடு ஒன்று, சென்னை, சிந்தாதிரிப்பேட்டை உயர் நிலைப்பள்ளியில் 1940 சனவரி 19, 20, 21, 22-ம் நாட்களில் திரு. வி, கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் திருவாளர் வித்துவான் T. P. மீனாட்சிசுந்தரனார் அவர்களால் நடத்துவிக்கப்பட்டது. பத்துப்பாட்டுக்களைப் பற்றி ஆயிர ரூபா பரிசோடு வித்துவான் பட்டம் பெற்ற ஆணறிஞர் ஐவரும், எம். ஏ., பட்டம் பெற்ற பெண்ணறிஞர் ஐவரும் பேசினார்கள். 1. திருமுருகாற்றுப்படை 2. நெடுநெல்வாடை 3. பொருநராற்றுப்படை 4. சிறுபாணாற்றுப்படை 5. பெரும்பாணாற்றுப்படை 6. மலைபடுகடாம் 7. பட்டினப்பாலை 8. குறிஞ்சிப்பாட்டு 9. மதுரைக் காஞ்சி 10. முல்லைப்பாட்டு என்ற பத்துப்பாட்டுகளும் முறையே வித்துவான் வரதராசனார், B. O. L., ஞானம்பாள் அம்மையார், M. A. வித்துவான் துரையரங்கனார். பதுமாவதி அம்மையார், M. A. L. T., வித்துவான் கீ. வா. சகந்நாதையர். இராசாமணி அம்மையார், M. A., இராசேசுவரி அம்மையார், M. A., L.T., வித்துவான் சக்கரபாணியார், மாசிலாமணி அம்மையார், M.A , L.T. ஆகிய பதின்மரும் மிகவும் விளக்கமாகப் பேசினார்கள். நான்கு நாட்களும் ஏராளமான தமிழ் அறிஞர்கள் கூட்டத்திற்கு வந்து சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்வடைந்தனர்.

அதைத் தொடர்ந்து கலித்தொகை மாநாடொன்றைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார் விரைவில் நடத்தப்போவதும் தெரிவிக்கப்பட்டது.

திருவையாற்று வடமொழிக் கல்லூரியில் முதன்
முதலாகத் தமிழ் வித்துவான் வகுப்பை நிறுவிய
தமிழ்ப் பெரியார்
சர் ஆ. தா. பன்னீர்ச்செல்வம், பி. ஏ., பார் அட் லா.